www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

## தமிழக போலீசு: வேலிகளா? காலிகளா?




படிப்பகம்

### புதிய ஜனநாயகத்தின் பத்தொன்பதாம் ஆண்டு தொடக்க விழா:

# “பத்திரிகை சுதந்திரம் மீதான பாசிச தாக்குதலை முறியடிப்போம்!”




**பத்திரிகை சுதந்திரம் குறித்து உரையாற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையாளர் திரு. தரியன் மேத்யூ; (அமர்ந்திருப்போர் - இடமிருந்து) பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியனின் தோழர் நாராயணசாமி, தினமணி துணை ஆசிரியர் அந்தோணிசாமி, பு.ஜ. நிருபர் அன்புச் செல்வன், வழக்குரைஞர் ம.தி. சோழர் மற்றும் முன்னாள் அரசு வழக்குரைஞர் ஓ. சகாபுதீன்.**

திருச்சி புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பில், டிசம்பர் 1-ஆம் தேதி புதிய ஜனநாயத்தின் 19-ஆம் ஆண்டு தொடக்க விழா ஓட்டல் செவனா அரங்கில் நடந்தது.

பத்திரிக்கைகளின் மீதான பாசிசத் தாக்குதலை முறியடிக்க உழைக்கும் மக்களும் அறிவுத்துறையினரும் அணிதிரள வேண்டியதன் அவசியத்தை இவ்விழா எடுப்பாக வலியுறுத்தியது.

புதிய ஜனநாயகம் நிருபர் தோழர் அன்புச்செல்வன் தலைமையில் நடந்த இவ்விழாவில் பல்வேறு பத்திரிகைகளின் மூத்த பத்திரிகையாளர்களும், புதிய ஜனநாயகம் ஏட்டின் வாசகர்களுமாக ஏறத்தாழ 250-க்கும் மேற்பட்டோர் திரளாகப் பங்கெடுத்தனர்.

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகையாளர் திரு.தரியன் மேத்யூ, ''பத்திரிக்கை சுதந்திரத்தின் இன்றைய நிலை'' என்ற தலைப்பில் உரையாற்றினார். பத்திரிகைகள் மீது ஆண்டாண்டு காலமாகத் தொடரும் அடக்குமுறைகளை குறிப்பாக, களத்தில் செய்தி சேகரிக்கும் நிருபர்கள் எதிர்கொள்ளும் தாக்குதல்களை வேதனையோடு கூறினார். இந்திராகாந்தி ஆட்சி காலத்தில், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் மீது 100-க்கும் மேற்பட்ட வழக்குகள் போடப்பட்டதை நினைவு கூர்ந்தார்.

அடுத்து உரையாற்றிய திருச்சி பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியனைச் சேர்ந்த தோழர் நாராயணசாமி, ''பு.ஜ.வின் நிலைப்பாடுகள் - ஒரு கண்ணோட்டம்'' என்ற தலைப்பில், அடக்குமுறைக்கு அஞ்சாத பு.ஜ.வின் அரசியல் நேர்மையையும் அதன் செய்தி நேர்மையையும் பற்றி ஒரு ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தை வழங்கினார்.


தமிழீழம், காஷ்மீர் பிரச்சினைகளில் பு.ஜ.வின் உறுதியான சரியான நிலைப்பாடுகள், பாசிஸ்டுகளின் மரணத்தின்போது ஆளும் வர்க்கத்திற்கு அவர்கள் சேவை செய்ததைத் தோலுரிக்கும் புரட்சிகரத் துணிவு ஆகியவற்றை உதாரணங்களோடு விளக்கினார்.

''தினமணி''யின் துணை ஆசிரியர் திரு. அந்தோணிசாமி அவர்கள், ''மக்களின் வாழ்க்கையும் பத்திரிகைகளின் பங்கும்'' என்ற தலைப்பில் உரையாற்றினார். ''இன்றைய சூழலில் உழைப்பாளிகள் உழைத்து உழைத்து நாட்டின் செல்வங்களை உருவாக்கினால், அரசு அதை அந்நியனுக்கு விற்றுவிடுவது நடக்கிறது. இதைப் பற்றி பத்திரிகையில் எழுதினால் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. பத்திரிகை என்பது மக்களின் வாழ்க்கையை உயர்த்தவும் மக்களின் எதிரியை அம்பலப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும். ஆனால், இன்றைய பத்திரிகைகள் அப்படி இல்லை. ஆனால், அதை புதிய ஜனநாயகம் செய்கிறது'' என்றார்.

அடுத்து, முன்னாள் அரசு வழக்கறிஞர் ஓ.சஹாபுதீன், ''இந்திய அரசியல் சட்டமும் பத்திரிகை சுதந்திரமும்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். பொதுவாக, பத்திரிகைகள் மக்கள் பிரச்சினைகளை எழுதாமல், பணம் சம்பாதிப்பதற்காக ஆபாசப் படங்கள் மற்றும் அது பற்றிய செய்திகளை போடுகின்றன. இதனால் மக்கள் மத்தியில் அப்பத்திரிகைகள் மதிப்பிழந்து போகின்றன. இவற்றால் பத்திரிகைகள் மீதான தாக்குதல் எதிர்ப்பில்லாமல் அரங்கேறுகிறது'' என்றார்.

நிகழ்ச்சியின் இறுதியாக புதிய ஜனநாயகம் பத்திரிகைக்கு சந்தா சேகரிப்பு இயக்கத்தை மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில் அமைப்பைச் சேர்ந்த வழக்குரைஞர் ம.தி. சோழர் தொடங்கி வைத்தார். புதிய ஜனநாயகம் நிருபர் தோழர் தமிழ்செல்வன் நன்றியுரையுடன் நிறைவடைந்த இந்த விழா, புரட்சிகர பத்திரிகைகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் உழைக்கும் மக்களின் போராட்டங்களிலிருந்து பிரிக்க முடியாது என்ற உண்மையை நிலைநாட்டுவதாக அமைந்தது.

**தகவல்:**
**பு.ஜ. வாசகர் வட்டம்,**
**திருச்சி.**

மறுகாலனிய - பார்ப்பனியப் பண்பாட்டுப் படையெடுப்புக்கெதிரான போர் முழக்கம்

**தமிழ் மக்கள் இசை விழா**

**11-ஆம் ஆண்டு**

**பிப்ரவரி-21, 2004 சனிக்கிழமை**
**தஞ்சை - திருவள்ளுவர் திடல்**

**காலை முதல் மாலை வரை கருத்தரங்கம்**

**மாலை முதல் கலை மற்றும் இசை நிகழ்ச்சிகள்**

**மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு.**

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 19

**இதழ் 3**

ஜனவரி 2004

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

அட்டை ஓவியம்:
முகிலன்

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


# தி.மு.க.வின் நாற்காலிக் கனவும் கூட்டணிக் கணக்கும்

வேறுவேறு சுற்றுப்பாதையில், எதிரெதிர் திசையில் நகர்ந்து கொண்டிருக்கும் கோள்கள் ஒரே நேர்கோட்டில் சந்திப்பதைப் போல, ஓட்டுக்கட்சி அரசியலில் ஓர் அதிசயம் நிகழ்ந்துள்ளது. எதிரெதிரான அரசியல் சித்தாந்தம் பேசிக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் தேர்தல் ஆதாயம் கருதிச் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைப்பார்களே, அதைப் போன்ற வழக்கமான "அதிசயம்" அல்ல, இது.

தமிழ்நாட்டு அரசியலில் எதிரும் புதிருமாக உள்ள கருணாநிதி, ஜெயலலிதா ஆகிய இருவரும் ஒரு சேர விரும்பும் அரசியல் நிகழ்வொன்று நடந்தேறியுள்ளது. உண்மையில் கருணாநிதிதான் இதை நிகழ்த்தியுள்ளார் என்றாலும், இது நிகழ்வதற்கான சூழலை ஜெயலலிதாதான் ஏற்படுத்திக் கொடுத்தார். அதாவது, பா.ஜ.க. தலைமையிலான அரசிலிருந்தும் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்தும் தி.மு.க. விலக வேண்டும்; அதன் மூலம் தே.ஜ.கூ.வில் தனது கட்சி சேருவதற்கான வாய்ப்பு ஏற்படவேண்டும் என்பது ஜெயலலிதாவின் விருப்பம். இதற்காக, ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க., வி.இ.ப., மற்றும் இந்து முன்னணி ஆகிய அமைப்புகளிலும் செய்தித் தொடர்பு ஊடகத்திலும் உள்ள தனது பார்ப்பன எடுபிடிகள் மூலம், தி.மு.க., தேசிய ஜனநாயகக் கூட்டணியிலும் - அரசிலும் நீடிக்க முடியாத அளவுக்கு வெறுப்பேற்றி, ஆத்திரமூட்டி வெளியேறும் சூழலை ஜெயலலிதாதான் உருவாக்கினார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்தும் அதன் அரசில் இருந்தும் தி.மு.க. விலகுவது என்ற முடிவு திடீரென்று எடுக்கப்பட்ட முடிவுமல்ல; ஆட்சியாளர்கள் மற்றும் எதிர்த்தரப்பினர் உட்பட எதிரெதிர் முகாம்களில் உள்ள அரசியல் சக்திகளால் எதிர்பார்க்கப்பட்டதுதான். இந்த முடிவுக்கு உள்நோக்கம் கற்பிக்கும் முயற்சியில் பா.ஜ.க.வின் அதிகாரபூர்வக் கருத்துக்கள் வெளிவந்தபோதும், இராம. கோபாலன் உட்பட ஜெயலலிதாவின் பார்ப்பனக் கைக்கூலிகள் பலராலும் வெளிப்படையாகவே இம்முடிவு வரவேற்கப்பட்டிருக்கின்றது.

இதோடு, தி.மு.க.வுக்கு மேலும் வெறுப்பேற்றும் வகையில் ஒரு மனோவியல் பிரச்சாரத்தைப் பார்ப்பன "மீடியா" மூலம் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. "தி.மு.க.வின் விலகலால் பா.ஜ.க. அரசுக்கு நெருக்கடி ஒன்றுமில்லை. பா.ஜ.க - அ.தி.மு.க. மற்றும் பா.ம.க கூட்டணி அடங்கிய பழைய கூட்டணி உருவாகும். ஆதலால் தி.மு.க. விலகலால் பா.ஜ.க.விற்கு நட்டம் ஏதும் ஏற்படாது. தி.மு.க.வுக்குத்தான் நட்டம் ஏற்படும்" என்று ஆரூடம் கூறுகிறது. கூடவே, "மத்திய அரசில் உள்ள பதவிகள், ஜெயலலிதாவிற்கு எதிரான பாதுகாப்புக் கேடயமாகவும், தே.ஜ.கூட்டணி தமிழகத்தில் அரசியல் பாதுகாப்பையும் கொடுத்தன. இப்போது சிறுபான்மை மதத்தினரின் ஓட்டுக்காகவும், காங்கிரசுடன் கூட்டுச் சேருவது என்கிற முடிவுக்காகவும் பா.ஜ.க தலைமையிலான அரசிலும் கூட்டணியிலும் இருந்து தி.மு.க. விலகியுள்ளது. ஜெயலலிதா அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கள் கருணாநிதிக்கு புதிய தெம்பையும், நம்பிக்கையையும், துணிவையும் அளித்துள்ளன. தீவிரவாத இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது, தீவிரவாத அமைப்புகளுக்கு வாய்வழி ஆதரவு தெரிவிப்பது குற்றமாகாது என்ற உச்ச நீதிமன்ற அணுகுமுறை புதிய கேடயமாகக் கிட்டிவிட்டதால் 'மத்திய அரசு உறவு' என்ற பழைய கேடயத்தை உதறி விடலாம் என்று கருணாநிதி முடிவெடுத்துள்ளார்" என்றவாறு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க - பார்ப்பனப் பிரச்சாரம் போகிறது.

அதாவது, "கருணாநிதியின் ஊழல் குற்றங்களுக்கு எதிராக ஜெயலலிதா அரசு எடுத்த நடவடிக்கைகளில் இருந்து அவர் தன்னைக் காத்துக் கொள்ள மத்திய அரசின் தயவு தேவையாக இருந்தது" என்பதிலிருந்து "கருணாநிதி தீவிரவாத ஆதரவாளராக இருப்பதால் தீவிரவாத எதிர்ப்பாளரான ஜெயலலிதாவிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள மத்திய அரசின் ஆதரவு என்ற கேடயம் அவசியமாக இருந்தது" என்பதாக விரித்துச் சொல்லுகிறது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - பார்ப்பன கும்பல். "தற்போது உச்ச நீதிமன்றம் மேற்கொள்ளும் அணுகுமுறைப்படி தீவிரவாத அமைப்புகளுக்கு தாம் ஆதரவளிப்பதற்குத் தடை இருக்காது என்று கருதிய கருணாநிதி விலகல் முடிவெடுத்து விட்டார்" என்று சுற்றி வளைத்துப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. பிறகு, நேரடியாகவே கருணாநிதி ஒரு பயங்கரவாதி,

தொடர்ச்சி 13-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# உலக சமூக மன்றம்:
# போலி கம்யூனிஸ்டுகளின் ஏகாதிபத்திய சேவை
# புரட்சியின் பெயரால் சந்தர்ப்பவாதம்

உலக சமூக மன்றத்தின் (World Social Forum) நான்காவது ஆண்டு மாநாடு ஜனவரி 16 முதல் 21 வரை மும்பையில் நடைபெறவிருக்கிறது. ஏகாதிபத்தியங்கள் தந்தருளிய டாலர்களை ரூபாய்களாக மாற்றிக் கையில் வைத்துக் கொண்டு, ''மும்பைக்கு ரயில் செலவு - சாப்பாடு இலவசம்'' என்று கூறியபடியே 'ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளை' வலைவீசித் தேடிவருகிறார்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள். வலது - இடது கம்யூனிஸ்டுகள் மற்றும் ''லிபரேசன் குழுவின''ரோ இந்த முற்போக்கு கும்பமேளாவுக்குப் பக்தி சிரத்தையுடன் பாடுபட்டு அணிதிரட்டுகிறார்கள்.

ஃபோர்டு பவுண்டேஷன், ராக்பெல்லர் ஃபவுண்டேஷன் போன்ற ஏகாதிபத்திய முதலாளிகள், பன்னாட்டு நிறுவனங்கள், ஐரோப்பிய அரசுகள் - ஆகியோர் வழங்கும் நன்கொடையில், சுமார் 200 கோடி ரூபாய் செலவில் மும்பையில் நடக்கவிருக்கும் இந்தக் கூத்து, மாபெரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராக, செய்தி ஊடகங்களால் சித்தரிக்கப்படும்; உலக வங்கி, ஐ.எம்.எஃப்-இன் அடிமைகளான பிரேசிலின் லூலா போன்ற அரசுத் தலைவர்களும், ஏகாதிபத்திய எச்சில் காசில் வயிறு வளர்க்கும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் தலைவர்களும் உதிர்க்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சவடால்களை தினசரிகள் முதல் பக்கத்தில் வெளியிடும்.

புதியதொரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் தோன்றிவிட்டதைப் போன்ற பிரமையை இவை மக்கள் மத்தியில் தோற்றுவிக்கும். குறிப்பாக, தனியார்மய - தாராளமயக் கொள்கைகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களையும், ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு கொண்ட அரசியல் முன்னணியாளர்களையும் இது பெருமளவிற்குத் திசைதிருப்பும். எனவே உலக சமூக மன்றத்தை அம்பலப்படுத்துவதும், அதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒளிவட்டத்தைச் சூட்டும் போலி கம்யூனிஸ்டுகளை அம்பலப்படுத்துவதும் நம் கடமையாகிறது.

**உலக சமூக மன்றம்: கம்யூனிச எதிர்ப்பே நோக்கம்!**

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் போலி கம்யூனிஸ்டுகளும் கூறுவதைப் போல, உலக சமூக மன்றம் (உ.ச.ம.) என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கங்களிலிருந்து தானே முகிழ்ந்தெழுந்த முன்னணி அல்ல. ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைத் திசை திருப்பவும், கம்யூனிசத்தின்பால் மக்கள் நாட்டம் கொண்டு விடாமல் தடுக்கவும் எதிரிகளால் திட்டமிட்டே உருவாக்கப்பட்ட அமைப்புதான் உ.ச. மன்றம். இன்று கம்யூனிசத்தை எண்ணி ஏகாதிபத்தியங்கள் அஞ்சக் காரணமிருக்கிறது.

கம்யூனிஸ்டு இயக்கம் பலவீனமாக இருக்கிறது என்பது உண்மைதான்; சியாட்டில், ஜெனோவா, கோதன்பர்க் போன்ற நகரங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்லர் என்பதும் உண்மைதான். ஆனால், ஏகாதிபத்தியங்களின் உலக மேலாதிக்கக் கொள்கையானது முதலாளித்துவத்தின் கோரமுகத்தைத் தரிசிக்கும் வாய்ப்பை உலக மக்கள் அனைவருக்கும் வழங்கி வருகிறது.

பெரிதும் பீற்றிக் கொள்ளப்படும் முதலாளித்துவ விழுமியங்களான ''சுதந்திரம்'', ''ஜனநாயகம்'' போன்றவை காலாவதியாகி, மேலை நாடுகளே பாசிசமயமாகி வருகின்றன. மக்கள் நல அரசு என்ற மாயையைத் தகர்க்கின்றன, உலக வங்கியின் கட்டுமானச் சீரமைப்புக் கொள்கைகள்; தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைகள் யாவும் பறிக்கப்படுகின்றன; ஒடுக்கப்பட்ட நாடுகளின் அரசியல் சட்டங்கள் ஏகாதிபத்திய மூலதனத்தின் தேவைக்கேற்பத் திருத்தி எழுதப்படுகின்றன. நிலம், நீர், காற்று போன்ற பஞ்ச பூதங்களையும் தனது தனிச் சொத்தாக அறிவிக்கிறது, ஏகாதிபத்தியம். முதலாளித்துவத்தின் இந்தக் கோரமுகத்தைக் கண்ட மக்கள், எந்த கம்யூனிஸ்டின் தூண்டுதலும் தேவைப்படாமல், ''முதலாளித்துவம் ஒழிக!'' என்று முழங்குகிறார்கள்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கம்யூனிசம் செத்துவிட்டதாகக் குதியாட்டம் போட்ட முதலாளித்துவம், இப்போது கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறது. ''முதலாளித்துவம் ஒழிக'' என்ற முழக்கம் தவிர்க்கவியலாமல் ''சோசலிசமே மாற்று'' என்ற சிந்தனைக்கு மக்களை இட்டுச் சென்றுவிடக் கூடும் என்ற அபாயத்தை ஏகாதிபத்தியவாதிகள் உணர்ந்திருக்கிறார்கள்.

**செங்கொடிக்கு எதிராகச் செங்கொடி!**

அதனால்தான் ''இன்னொரு உலகம் சாத்தியமே'' (Another world is possible), ''மாற்றுகள் இருக்கின்றன'' - என்ற முழக்கங்களுடன் 'உலக சமூக மன்றம்' என்ற அமைப்பு திட்டமிட்டே உருவாக்கப்பட்டிருக்கிறது.

உ.ச. மன்றத்தில் பிரேசில் தொழிலாளர் கட்சியின் தலைமைப் பாத்திரமும், நம் நாட்டில் வலது - இடது கம்யூனிஸ்டு கட்சிகள் மற்றும் லிபரேசன் குழுவினரின் முக்கியமான பாத்திரமும் இந்தச் சதித்திட்டத்தின் ஒரு அங்கமாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒரு முதலாளித்துவ அணிசேர்க்கையையே சிவப்புக் கூட்டணி போலச் சித்தரிப்பதன் மூலம் மக்களின் நம்பிக்கையைப் பெறும் சூழ்ச்சி இது. தன்னார்வக் குழுக்களின் 'சொல்லாடலில்' கூறுவதாயின், இதற்குப் பெயர் 'இடது பன்மைவாதம்!'

மத்தியத்துவத்துக்கு எதிராகப் பன்மைவாதம், எல்லா சித்தாந்தங்களையும் அமைப்பு வடிவங்களையும் எதிர்ப்பது, அதிகாரத்துவம் என்று கூறி சோசலிசத்தைத் தூற்றுவது ஆகிய இவையனைத்தும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ''கொள்கையிலும், நடைமுறையிலும்'' ஏற்கெனவே இருந்து வருகின்றன. அங்கிருந்துதான் உலக சமூக மன்றத்தின் ''கொள்கை அறிக்கை''க்கு இவை குடிபெயர்ந்திருக்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

**எதிரியின் கோட்டையா, நமது தடையரணா?**

ஏகாதிபத்தியங்களின் உலக மேலாதிக்கத்தைப் பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள கோட்டைச் சுவர்தான் உ.ச.மன்றம். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்தான் இந்தச் சுவரின் கற்கள்; பின்நவீனத்துவம், அராஜகவாதம், டிராட்ஸ்கியவாதம் போன்ற கம்யூனிச எதிர்ப்புச் சித்தாந்தங்கள் இதன் சாந்து; மேலே பூசப்பட்டிருக்கும் சிவப்பு வண்ணம் போலி கம்யூனிஸ்டுகளின் உபயம். எதிரியைப் பாதுகாக்கும் இந்தக் கோட்டைச் சுவரின் சிவப்பு நிறத்தைக் காட்டி, இதையே எதிரிக்கு எதிரான தடையரணாகச் சித்தரிக்கிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள்.

மூன்றாண்டுகளாக பிரேசிலில் நடத்தப்பட்டு வந்த உ.ச.மன்றத்தின் மாநாடு மும்பைக்கு இடம் மாறியிருப்பதை வரவேற்று ''வாராது வந்த மாமணியே'' எனக் கொண்டாடுகிறார்கள் போலிகள். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பெருகிவரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைச் சீர்குலைக்கும் நோக்கத்திற்காகவே அங்கு நடத்தப்பட்ட மாநாடு, தற்போது தெற்காசியப் பகுதியைக் குறிவைத்து மும்பைக்கு நகர்த்தப்பட்டிருப்பதன் காரணம், இப்பிராந்தியத்தின் கம்யூனிச இயக்கங்களைப் பூண்டோடு ஒழிப்பதுதான்! ஆனால், இந்த உண்மையை இருட்டடிப்பு செய்கிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள்.

தங்களது ஏகாதிபத்தியக் கைக்கூலித்தனம் நக்சல்பாரிகளால் கேள்விக்குள்ளாக்கப்படுவதால், போலி கம்யூனிஸ்டுகள் அனைவரின் சார்பாகவும் ஆஜராகி, உ.ச.ம.வுக்கு ஆதரவாக வாதாடுகிறார், 'மார்க்சிஸ்டு' கட்சியின் மையக்குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி. (தீக்கதிர் - டிச, 21,22)

**தானாகத் தோன்றிய சுயம்புவா உ.ச.ம.?**

''அரசு சாரா அமைப்புகளின் கூட்டங்களும் செயல்பாடுகளும் உலக சமூக மாமன்றத்தின் தோற்றத்துக்கு உறுதுணையாக இருந்தது என்று ஒரு கருத்து உண்டு'' என்று உ.ச.ம.வின் தோற்றம் குறித்த கேள்விக்கு விடையளிப்பது போல கட்டுரை தொடங்குகிறது. ஆனால், அது குறித்த விவரங்களுக்குள் செல்லாமல், 1990-களில் நடைபெற்ற போராட்டங்களும் 1999-இல் சியாட்டிலில் நடைபெற்ற மக்கள் எதிர்ப்புமே உ.ச.ம-வின் தோற்றத்துக்கு முக்கியக் காரணமாகும் என்று மழுப்புகிறார் யெச்சூரி.

**''முதலாளித்துவம் ஒழிக'' என்ற முழக்கம் தவிர்க்க இயலாமல் ''சோசலிசமே மாற்று'' என்ற சிந்தனைக்கு மக்களை இட்டுச் சென்று விடக் கூடும் என்ற அபாயத்தை ஏகாதிபத்தியவாதிகள் உணர்ந்திருக்கிறார்கள்.**

இப்படியொரு அமைப்பு உருவாக்க வேண்டிய அவசியம் பற்றி உலக வர்த்தகக் கழகத்தின் இயக்குனரும், ஏகாதிபத்திய ஊதுகுழலான ''எகனாமிஸ்ட்'' ஏடும் எழுதியதைப் பற்றியும், அதன் பின் ''அட்டாக்'' என்ற பிரெஞ்சு தொண்டு நிறுவனம் மற்றும் 'பிரேசில் தொழிலாளர் கட்சி' என்ற ஏகாதிபத்திய எடுபிடிக் கட்சி ஆகியோரின் முன்முயற்சியில் உ.ச.மன்றம் உருவாக்கப்பட்டதையும் பு.ஜ. நவம்பர் இதழில் எழுதியிருந்தோம்.

சொல்லப்போனால், சியாட்டில் போராட்டத்திற்கு ஒரு மாதம் முன்னதாகவே பிலிப்பைன்சில் ''மணிலா சமூக மன்றம்'' அமைக்கப்பட்டுவிட்டது. தென் கிழக்காசிய நாடுகளைத் திவாலாக்கிய உலக வங்கியும் ஆசிய வளர்ச்சி வங்கியும், அதன் விளைவாக எழுந்த உணவுக் கலகங்களையும் மக்கள் போராட்டங்களையும் கண்டு அவற்றைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே உருவாக்கிய அமைப்புதான் மணிலா சமூக மன்றம்.

1999, ஜனவரி 21,22 தேதிகளில் மணிலாவில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உலகவங்கி பிரதிநிதிகளுடன் போர்டு பவுண்டேஷன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். ''தாக்குப் பிடிக்கும் அளவிற்குள் வறுமையைக் கட்டுப்படுத்துவது'' என்பதுதான் மணிலா சமூக மன்றம் அறிவித்த பிரகடனம். இந்த மேடையிலிருந்துதான் உலக சமூக மன்றத்துக்கான அறிவிப்பு முதன் முதலாக வெளியிடப்பட்டது. எனவே, உ.ச.ம. என்பது ஏகாதிபத்தியங்களின் பொம்மை அமைப்பு என்பதற்குப் புதிய நிரூபணம் தேவையில்லை.

**தொண்டு நிறுவனங்களுடன் தொப்பூள் கொடி உறவு!**

அடுத்து, உ.ச.ம.விற்கு ஏகாதிபத்தியங்கள் நிதியுதவி அளிப்பதை 'மார்க்சிஸ்டு' கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்கிறார் யெச்சூரி. ஏகாதிபத்திய நிதியுதவி பெறும் அரசு சாரா நிறுவனங்களை 'மார்க்சிஸ்டு' கட்சி தொடர்ந்து எதிர்த்து வருகிறதாம். நம்புங்கள்! ''இந்தியாவில் நடைபெறும் உ.ச.ம.வின் கூட்டத்திற்கு ஃபோர்டு, ராக்பெல்லர் பவுண்டேசன் போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் காசு வாங்கக் கூடாது'' என்று 'மார்க்சிஸ்டு'கள் கண்டிப்பாக சொல்லியிருக்கிறார்களாம். ஆனால், தனிப்பட்ட அரசு சாரா அமைப்புகள் தனித்தனியே 'கொடையாளி'களிடம் பணம் வாங்கிக் கொள்ளலாமாம்! எப்பேர்ப்பட்ட கொள்கை உறுதி! ''மொத்தமாக வாங்காதே, தனித்தனியாக வாங்கு'' என்று ஒரு வரியில் சொல்ல வேண்டியதை 8 பாராவில் விளக்குகிறார் யெச்சூரி.

'மார்க்சிஸ்டு' கட்சி தொண்டு நிறுவனங்களை எதிர்த்துப் போராடுகிறது என்ற கதையை அவர்களது தொண்டர்களே நம்பமாட்டார்கள். அறிவொளி இயக்கத்தில் தொடங்கி இன்று மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வரை அவர்களுக்கிடையிலான தொப்பூள்கொடி உறவு உலகறிந்த உண்மை. உலக சமூக மன்றம் சொந்தக் காசில் நடக்கிறதா, ஏகாதிபத்தியங்கள் தந்த காசில் நடக்கிறதா என்பதையும் மும்பை செல்லும் தொண்டர்கள் பார்த்தே புரிந்து கொள்ள முடியும்.

அரசு சாரா நிறுவனங்கள் **(NGO's)** எனப்படுபவையே கம்யூனிசத்தை ஒழிக்கும் நோக்கத்திற்காக 1970-களில் ஏகாதிபத்தியங்களால் உருவாக்கப்பட்டவைதான். அவ்வாறிருக்க, தன்னார்வக் குழுக்களின் மகா சம்மேளனமான உ.ச.மன்றம் ''ஏகாதிபத்தியத்திடம் காசு வாங்கக் கூடாது'' என்று கூறுவது பூனையைச் சைவமாக்குவதைப் போன்ற ஒரு பித்தலாட்டம்.

**நேற்று சீர்குலைவு சக்திகள்... இன்று?**

பிரச்சினை அதுவல்ல; 'மார்க்


படிப்பகம்

www.padippakam.com

சிஸ்டு'களுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் இடையில் மலர்ந்திருக்கும் உறவுதான் அவர்கள் பதிலளிக்க வேண்டிய பிரச்சினை. 1988-இல் 'மார்க்சிஸ்டு' கட்சியின் மத்தியக் கமிட்டி, தொண்டு நிறுவனங்களை ''கம்யூனிசத்துக்கு எதிரான சீர்குலைவு சக்திகள்'' என்று கூறியது. ''அவற்றுடன் எந்தத் தொடர்பும் கூடாது'' என்று தன் அணிகளுக்கு உத்தரவிட்டது. ரசியாவை சமூக ஏகாதிபத்தியம் என்று கூறியதால் நக்சல்பாரிகளை சி.ஐ.ஏ ஏஜெண்டுகள் என்றும் அவதூறு செய்தது. தொண்டு நிறுவனங்கள் குறித்து பிரகாஷ் காரத் எழுதிய நூலில் இவையனைத்தும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

இன்றோ தொண்டு நிறுவனங்கள் நிரம்பியிருக்கும் உ.ச.ம.-வில் அவர்களோடு தோளோடு தோள் நின்று செயல்படுகிறது 'மார்க்சிஸ்டு' கட்சி. உ.ச.மன்றத்திற்குள் சென்று அவர்களுடன் தத்துவப் போராட்டம் நடத்துவதாகச் சொல்கிறார், யெச்சூரி. அமெரிக்கா உருவாக்கிய சீர்குலைவு சக்திகள் இன்று வென்றெடுக்கப்படக் கூடிய நட்பு சக்திகளாக மாறிய மர்மம் என்ன?

**பொதுத்திட்டமே கூடாதாம்!**

இதற்கான விடையை 'மார்க்சிஸ்டு' கட்சியின் அதிகாரபூர்வ ஆங்கில வார ஏடான 'பீப்பிள்ஸ் டெமாக்ரசி'யில் காணமுடிகிறது.

''ஆம், ஏகாதிபத்திய உலகமயமாக்கலை எதிர்ப்பதைத் தமது பிரதான நோக்கமாகக் கொள்ளாத அமைப்புகளும் உ.ச. மன்றத்தில் இருக்கின்றன. இத்தகைய குழுக்களையும் அனுமதித்து தற்போதைய பன்முகத் தன்மையைப் பாதுகாப்பது நல்லதா, அல்லது ஒரு பொதுத்திட்டத்தின் அடிப்படையில் ஒற்றைப் பரிமாண இயக்கத்தைக் கட்டுவது நல்லதா? அவ்வாறு கட்டினால் அத்தகைய இயக்கமானது நேரெதிரான நோக்கங்களைக் கொண்ட அமைப்புகளாக உடைந்து விடாதா?'' (பீப்பிள்ஸ் டெமாக்ரசி - நவ, 30 பக்-2)

மழுப்பலாக எழுதப்பட்டுள்ள இந்த வாக்கியங்களின் பொருள் இதுதான்: போர்டு பவுண்டேசன் போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களும் - 'மார்க்சிஸ்டு'களைப் போன்ற ஏகாதிபத்திய 'எதிர்ப்பாளர்களும்', ஆப்கன் போரை ஆதரிப்போரும் - எதிர்ப்போரும் ஒற்றுமையாக இருந்து விவாதிக்கும் அரங்கமாக உ.ச.ம. இருக்கிறதாம்! ''இந்த ஒற்றுமையை உடைக்கலாமா?'' என்று கேட்கிறது 'மார்க்சிஸ்டு' கட்சி. ஏகாதிபத்தியங்களே நட்பு சக்தியாக மாறியபின், அவர்கள் உருவாக்கிய ''சீர்குலைவு சக்திகள்'' மார்க்சிஸ்டுகளின் தோழர்களாக மாறியதில் வியப்பென்ன?

தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்க்க பி.எம்.எஸ். உடன் கூட்டணி! ஏகாதிபத்தியத்தை எதிர்க்க ராக்பெல்லருடன் கூட்டணி! ''பொதுத்திட்டம் ஒழிக - பன்முகத் தன்மை வாழ்க!'' என்பது உ.ச.ம.வின் கொள்கை மட்டுமல்ல; அது இப்போது 'மார்க்சிஸ்டு' கட்சியின் கொள்கை!

**சோசலிச முகாமாகிறது உ.ச.ம.!**

''ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி ஒன்றைத் தனியாகக் கட்டுவதே பிளவுவாதம்'' என்று கூறித் தொடங்கும் இந்தக் கட்டுரை, கடைசியாக சோசலிசத்தில் வந்து முடிகிறது. உ.ச.ம.வில் சோசலிசம் இருட்டடிப்பு செய்யப்படாமல் தடுப்பதற்காகத்தான் உள்ளிருந்தே போராடுவதாகவும், அப்படியே உ.ச.ம.வை சோசலிச முகாமாக மாற்றும் சாத்தியக் கூறுகளும் உள்ளன என்றும் கோடி காட்டுகிறது, ''பீப்பிள்ஸ் டெமாக்ரசி''.

இந்திய ஆளும் வர்க்கங்களிடமிருந்து நாடாளுமன்றத்தை வெற்றிகரமாகக் கைப்பற்றி விட்டனர்; அடுத்து, ஏகாதிபத்தியங்களின் கையிலிருந்து உலக சமூக மன்றத்தைப் பிடுங்க வேண்டியதுதான் பாக்கி! உலக சோசலிசப் புரட்சிக்கு எவ்வளவு சுலபமான குறுக்குவழி!

மார்க்சியம் என்ற சொல்லைக் கூடத் தலைமுழுகிவிட்டு, பின் நவீனத்துவத்தைத் தனது சித்தாந்தமாக ஏற்றுக் கொண்டு, உலக சமூக மன்றத்தின் புகழ் பாடுகிறது, ''பீப்பிள்ஸ் டெமாக்ரசி''. ஆனால், கியூபா, சீனா, லாவோஸ், வியத்நாம், வடகொரியா போன்ற தங்களது அன்புக்குரிய 'சோசலிச' நாடுகளின் துணையுடன், ரசியா உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் உள்ள தங்களது தோழமை 'கம்யூனிஸ்டுகளை' இணைத்து, சுயேச்சையான ஒரு உலகு தழுவிய ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கம் உருவாக்குவது பற்றி 'மார்க்சிஸ்டு' கட்சி மூச்சுக்கூட விடவில்லை.

**வாராது வந்த மாமணி!**

அதிகார வர்க்க முதலாளித்துவத்தையே சோசலிசமாகச் சித்தரித்தார்கள் போலி கம்யூனிஸ்டுகள், மேற்படி 'சோசலிச' நாடுகள் அனைத்தும் உலக வர்த்தகக் கழகத்திடம் சரணடைந்து விட்டன. தாங்கள் ஆளும் மாநிலங்களிலேயே தனியார்மய, தாராளமயக் கொள்கைகளை அமல்படுத்தும் போலிகள், உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு குறித்துக் கனவும் காணவியலாது என்பதுதான் எதார்த்தம்.

எனவே, உலகமயமாக்கலைக் கீழிருந்து அமல்படுத்தும் மன்றமான உலக சமூக மன்றம் ஒன்றுதான் போலி கம்யூனிஸ்டுகள் ஒண்ட முடிந்த ஒரே கூடாரம். பறிக்கப்படும் தொழிற்சங்க உரிமைகளைக்கூடக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல், பொதுத்துறை சங்கங்களும், அவற்றையே அடித்தளமாகக் கொண்டிருக்கும் போலி கம்யூனிஸ்டு கட்சிகளும் ஆட்டம் கண்டு போயிருக்கும் சூழலில், உ.ச.மன்றம் மும்பைக்கு வந்திருக்கிறது. ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு உலக இயக்கம் தோன்றிவிட்டது போன்ற பிரமையில் தம் அணிகளை ஆழ்த்துவதற்கு இது போலி கம்யூனிஸ்டுகளுக்குப் பெரிதும் பயன்படும் என்பதால், அவர்களைப் பொருத்தவரை உண்மையிலேயே இது 'வாராது வந்த மாமணி'தான்!

## ஏகாதிபத்திய விசுவாசிகள்

**உலக சமூக மன்றத்தின் மும்பை மாநாட்டிற்கு முன்னோட்டமாக, டிசம்பர் - 27,28,29 தேதிகளில் உ.ச.ம.வின் தமிழ் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்றது. மூன்றே நாட்களில் 122 கருத்தரங்குகள்; 14 தலைப்புகளில் மாநாடுகள்! பங்கேற்றவர்கள் தன்னார்வக் குழுக்களும், மார்க்சிஸ்டு கட்சியின் மாணவர், இளைஞர், மகளிர் அமைப்புகளும் தொழிற்சங்கங்களும்தான். பெயருக்குக் கொஞ்சம் வலது கம்யூனிஸ்டுகள்!**

**இத்தனை நிகழ்ச்சிகளுக்கும் இடம் கொடுத்து உதவியவர்கள் சென்னை லயோலா கல்லூரியும், ஸ்டெல்லா மேரி கல்லூரியும். மேட்டுக்குடியினரைத் தவிர யாரும் நுழைய முடியாத இந்தக் கல்லூரிகள், எந்த அரசியல் நிகழ்ச்சிக்கும் இடமளிக்காத இந்தக் கல்லூரிகள், உலக சமூக மன்றத்தின் மாநாட்டுக்கு மட்டும் தம் வகுப்பறைகளின் கதவுகளை எல்லாம் அகலத் திறந்து விட்டிருக்கின்றன. காரணம், ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்களின் கூடாரமே இந்தக் கல்லூரிகள் தான்.**

**ஏழை விசுவாசிகளுக்கு ஏசு. ஏகாதிபத்திய விசுவாசிகளுக்கு லயோலா!**



படிப்பகம்

www.padippakam.com

## மும்பை எதிர்ப்பியக்கம் - 2004

உலக சமூக மன்றத்தின் மும்பை மாநாடு, நக்சல்பாரி இயக்கத்தின் ஒரு பிரிவினருடைய சந்தர்ப்பவாதத்தையும் வெளிக்கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாக, இடது தீவிரவாதப் போக்கிற்கு உள்ளே உறையும் வலது சந்தர்ப்பவாதப் போக்கை இது வெளிக்கொண்டு வந்துள்ளது.

அனைத்திந்திய மக்கள் எதிர்ப்பு மன்றம் **(AIPRF)** என்ற புரட்சிகர அமைப்பு, உ.ச.ம. நடத்தும் ''மும்பை - 2004'' என்ற நிகழ்ச்சிக்கு இணையாக ''மும்பை எதிர்ப்பியக்கம் - 2004'' (எம்.ஆர். 2004) என்ற நிகழ்ச்சியை அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஏ.ஐ.பி.ஆர்.எஃப். வெளியிட்டுள்ள ஆவணங்களும், ''பீப்பிள்ஸ் மார்ச்'' என்ற பத்திரிகையும் உ.ச. மன்றத்தை விமரிசிக்கின்றன.

''உ.ச.ம.-வின் உறுப்பினர்கள் மிகப்பெரும் தன்னார்வக் குழுக்கள்; ஏகாதிபத்தியத்திடம் காசு வாங்கும் இந்தக் குழுக்களும் பிரேசில், இந்தியா போன்ற நாடுகளில் அதிகாரத்தில் இருக்கும் 'இடதுசாரி' கட்சிகளும்தான் உ.ச. மன்றத்தில் தலைமை தாங்குகின்றன. எதிர்ப்பை நிறுவனமயமாக்கவும் உண்மையான செயல்வீரர்களை ஏகாதிபத்தியத்துக்கு ஆபத்தில்லாத பாதையில் திசைதிருப்பவும்தான் போர்டு பவுண்டேஷன் போன்ற நிறுவனங்கள் உ.ச.மன்றத்திற்கு நன்கொடை அளிக்கின்றன.'' (எம்.ஆர். 2004 ஆவணங்கள்)

''உண்மையான மக்கள் இயக்கங்களுக்கும், சோசலிசம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்காக புரட்சியாளர்கள் தலைமையில் நடைபெறும் போராட்டங்களுக்கும் உ.ச.மன்றம் மிகப்பெரும் ஆபத்தாக உருவெடுத்துள்ளது. இதை முற்றுமுழுதாக நாம் மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும்...''

''உ.ச.மன்றத்தில் பங்கேற்று தன்னார்வத் தொண்டு நிறுவன நடவடிக்கைகள் குறித்து மக்களிடம் நம்பிக்கையை உருவாக்குகின்ற சமூக ஜனநாயகவாதிகள், திருத்தல்வாதிகள் மற்றும் புரட்சியாளர்கள் என்று சொல்லப்படுவோர் ஆகியோர் அனைவரையும் நாம் சித்தாந்த ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் குறிவைத்துத் தாக்க வேண்டும்'' (பீப்பிள்ஸ் மார்ச், நவ - 2003)

### எதிரியின் ஏஜெண்டு நட்பு சக்தியா?

இத்தகைய சண்டமாருதங்களுக்குப் பின்னால் ''உ.ச. மன்றத்தை ஒழித்துக் கட்ட வேண்டும்'' என்ற அறைகூவலைத்தான் யாரும் எதிர்பார்க்க முடியும். ஆனால், ''உ.ச. மன்றத்திற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல'' என்று அடிக்கோடிட்டு வலியுறுத்திச் சொல்கிறது எம்.ஆர்.2004. உலக சமூக மன்றத்தில் பங்கேற்கின்ற எல்லா சக்திகளையும் தங்கள் நிகழ்ச்சியிலும் வந்து கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறது. ''ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை வளர்த்தெடுக்கும் கடமையை உ.ச.ம. விற்குள் இருந்தபடிச் சுதந்திரமாகச் செய்ய இயலாது என்ற காரணத்தினால்தான்'' தாங்கள் தனியே நிகழ்ச்சி நடத்த நேர்ந்ததாகத் தன்னிலை விளக்கம் தருகிறது, எம்.ஆர்.2004.

''போர்க்குணமிக்க மக்கள் போராட்டங்களில் ஈடுபடுவதாக இருந்தால், உலக சமூக மன்றத்துடன் இணைந்து போராடத் தயார் என்று நாம் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்... உ.ச.ம.விடம் ஐக்கியமும் போராட்டமும் என்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று கூறுகிறது பீப்பிள்ஸ் மார்ச் (நவ-2003).

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைச் சீர்குலைக்கவும், கம்யூனிச இயக்கங்களைக் குழிதோண்டிப் புதைக்கவும் ஏகாதிபத்தியங்களால் உருவாக்கப்பட்ட கைக்கூலி அமைப்புதான் உ.ச. மன்றம் என்பதற்கான ஆதாரங்களைத் தொகுத்து வழங்கி விட்டு, இறுதியில் அதனை ஐக்கியப்பட வேண்டிய நட்பு சக்தியாக வரையறுக்கின்றது, 'பீப்பிள்ஸ் மார்ச்'.

இதையேதான் யெச்சூரியும் சொல்கிறார். ஏகாதிபத்திய ஆதரவாளர்கள் முதல் எதிர்ப்பாளர்கள் வரை

## மும்பை எதிர்ப்பியக்கம் எம்.ஆர். 2004
## சொல்லுக்கும் செயலுக்கும்...!

**உலக சமூக மன்றம் என்பதே ஏகாதிபத்தியங்களின் எச்சில் காசில் உருவாக்கப்பட்ட ''தன்னார்வக் குழுக்களின் கூடாரம்'' என்பதுதான் அனைத்திந்திய மக்கள் எதிர்ப்பு மன்றத்தின் (AIPRF) விமரிசனம். எம்.ஆர். - 2004 என்ற அமைப்பை அறிமுகம் செய்யும் முன்னோடிகள் பட்டியலில் ஏ.ஐ.பி.ஆர். எஃப்-உடன், ''மக்கள் போராட்டங்களுக்கான சர்வதேச மையம்'' (International League for People's Struggles) என்ற அமைப்பும் உள்ளது. இந்த சர்வதேச அமைப்பில் ஏ.ஐ.பி.ஆர்.எஃபும் உறுப்பினராக உள்ளது.**

**இன்று தன்னார்வக் குழுக்களைப் பற்றிச் சண்டமாருதம் செய்யும் ஐ.எல்.பி.எஸ். அமைப்போ, சமீபகாலம் வரையிலும் உலக சமூக மன்றத்தின் உறுப்பினராக இருந்தது. அது மட்டுமல்ல, ஐ.எல்.பி.எஸ் என்ற அமைப்பில் வேறு பல தன்னார்வக் குழுக்களும் அங்கம் வகிக்கின்றன. நெதர்லாந்தில் நடைபெற்ற முதல் சர்வதேசக் கூட்டத்தில் ஐ.எல்.பி.எஸ்.-இன் நிர்வாகக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட *பாத்திமா பர்னார்டு* என்பவரே தன்னார்வக் குழுவைச் சேர்ந்தவர்தான். இவர் இந்தியாவில் இயங்கும் ''கிராமப்புறக் கல்வி மற்றும் வளர்ச்சிக்கான கழகம்'' (Society for Rural Education and Development) என்ற ஏகாதிபத்திய நிதி பெறும் தொண்டு நிறுவனத்தின் தலைவர்.**

**ஐ.எல்.பி.எஸ்.-இல் அங்கம் வகிக்கும் பிலிப்பைன்ஸ் நாட்டின் அமைப்புகளைச் சேர்ந்தவர்களோ கிறித்தவ சர்ச்சுகளிடம் பணம் வாங்குபவர்கள்; ''இயக்கத்தின் வளர்ச்சிக்காக அந்நிய நிதி வாங்கலாம்'' என்று வாதாடும் பிலிப்பைன்ஸ் 'தோழர்களும்' அதில் இருக்கிறார்கள்.**

**தன்னார்வக் குழுக்கள் குறித்த ஏ.ஐ.பி.ஆர்.எஃபின் விமரிசனம் நேர்மையானது என்றால், முதலில் அது ஐ.எல்.பி.எஸ். அமைப்பிலிருந்து வெளியேறியிருக்க வேண்டும். பிறகு, ஐ.எல்.பி.எஸ்.-ஐ, எம்.ஆர்-2004 இலிருந்தும் வெளியேற்றியிருக்க வேண்டும்.**

**''நேர்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களை இனம் காண்பதெப்படி?'' என்ற கேள்வியை எழுப்பி, கீழ்க்கண்டவாறு பதிலளிக்கிறது 'பீப்பிள்ஸ் மார்ச்' (அக்.'03).**

**''அவர்களுடைய சொல்லுக்கும் செயலுக்கும் ஒற்றுமை இருக்கிறதா என்று பாருங்கள். அது ஒன்றுதான் அளவுகோல்!''**

**நாங்கள் மட்டுமா பார்க்கிறோம்? நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது, இந்த நேர்மையை!**

பலரும் உ.ச.ம.வில் இருப்பதாகவும் கருத்துப் போராட்டத்தின் மூலம் பலரை சோசலிசத்துக்கு வென்றெடுக்க முடியும் என்றும் கூறுகிறார். ''உ.ச.ம.வின் மீதான எத்தகைய விமரிசனங்களையும் உள்ளேயே தெரிவிக்க உரிமை உண்டு. உள்ளே வாருங்கள், ஐக்கியப்படுவோம்!'' என்று அழைக்கிறார் யெச்சூரி. ''வெளியே வாருங்கள், ஐக்கியப் படுவோம்!'' என்று அழைக்கிறது எம்.ஆர். 2004.

**தனியே வந்தால் எதிரி! தன்னார்வக்குழுவுடன் வந்தால் நண்பன்!**

முந்தையதற்குப் பெயர் திருத்தல்வாதம்! பிந்தையது புரட்சியாம்! 'மார்க்சிஸ்டு' கட்சி ஆளும் வர்க்கக் கட்சி என்று வரையறுத்து எதிர்க்கும் பீப்பிள்ஸ் மார்ச், அதே கட்சி தன்னார்வக் குழுக்களுடன் இணைந்து உ.ச.ம.வின் உறுப்பினராக வரும்போது எம்.ஆர் - 2004-இல் பங்குபெறும் தகுதியை வழங்கி விடுகிறது. திருத்தல்வாதிகளின் பாவத்தைத் தன்னார்வக் குழுக்கள் கழுவிவிடும் போலும்!

**குறைந்தபட்ச சித்தாந்தம்!**

'ஒரு மாபெரும் ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கத்தை திடீரென்று உருவாக்க விரும்பும் எம்.ஆர் - 2004, அதற்காகத் தனது சித்தாந்தத்தையும், மரபையும் கைவிடுவதற்கும் தயாராக இருக்கிறது. ''பல்வேறு சித்தாந்தப் போக்கு கொண்டோரும் தொண்டு நிறுவனங்களும் இணைந்து நடத்திய போராட்டம்'' என்று யெச்சூரியே கூறும் ''சியாட்டில் போராட்டத்தின் போர்க்குணமிக்க மரபுக்கு நாங்கள் தான் வாரிசு'' என்கிறது எம்.ஆர் - 2004.

அராஜகவாதம், பின்நவீனத்துவம், ட்ராஸ்கியவாதம் போன்ற சித்தாந்தப் போக்குகளை எம்.ஆர். - 2004 கண்டு கொள்ளவில்லை. போர்க்குணம், சித்தாந்தத்தை மாற்றீடு செய்து விட்டது. அதனால்தான் ''வாருங்கள், ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கான கண்ணோட்டத்தை உருவாக்கிக் கொள்வோம்'' என்று உ.ச.ம.வின் உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரையும் அழைக்கிறது எம்.ஆர். 2004.

குறைந்தபட்சத் திட்டத்தின் அடிப்படையில்தான் ஐக்கிய முன்னணிகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால், இவர்களோ குறைந்தபட்ச சித்தாந்தத்தை உருவாக்க முனைகிறார்கள். இதற்கும் மார்க்சிய - லெனினியத்திற்கும் எந்த உறவுமிருக்க முடியாது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இதையே யெச்சூரி வேறு விதமாகச் சொல்கிறார்: ''இன்னொரு உலகத்தை உருவாக்குவதற்கான தீர்வுகள் யாரிடமும் தயாராக இல்லை. வாருங்கள், கலந்து பேசி கண்டுபிடிப்போம்'' என்கிறார். முந்தையது புரட்சி; பிந்தையது திருத்தல்வாதமாம்!

> **குறைந்தபட்சத் திட்டத்தின் அடிப்படையில்தான் ஐக்கிய முன்னணிகள் உருவாக்கப் படுகின்றன. ஆனால், மும்பை எதிர்ப்பியக்கத்தினரோ (எம்.ஆர். - 2004) குறைந்தபட்ச சித்தாந்தத்தை உருவாக்க முனைகிறார்கள். இதற்கும் மார்க்சிய - லெனினியத்திற்கும் எந்த உறவும்இருக்க முடியாது.**

**எதிரியின் ஆயுதமா, பாதுகாப்பு வால்வா?**

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறித்த பார்வையிலும் இந்த ஒற்றுமை தொடர்கிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறித்து அக்கு வேறு, ஆணிவேறாக அலசுகிறது பீப்பிள்ஸ் மார்ச் இதழின் கட்டுரை. ஆனால், ''கம்யூனிசத்தை அழிக்கவும், ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்ட ஏஜெண்டுகள்'' என்றும் அவர்களை எதிரிகளாகவே கருத வேண்டும் என்று வரையறுக்கவில்லை.

மாறாக, மக்கள் போராட்டங்களை அமைதியான, சட்டபூர்வ வழிகளில் செலுத்தி அவற்றை நீர்த்துப் போகச் செய்யும் ''பாதுகாப்பு வால்வுகள்'' என்று மட்டுமே வரையறுக்கிறது. எனவேதான், ''தங்களது ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியில் தொண்டு நிறுவனங்கள் பங்கேற்கக் கூடாது'' என்று எம்.ஆர் - 2004 எங்குமே கூறவில்லை. மாறாக, எம்.ஆர். 2004-இல் பங்கேற்கும் அமைப்புகளில் தொண்டு நிறுவனங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

தொண்டு நிறுவனங்களைப் 'பாதுகாப்பு வால்வு' என்றுதான் யெச்சூரியும் அழைக்கிறார். அவர்களுடன் களத்திலும், கருத்துத் தளத்திலும் போராடுவதன் மூலம் வென்றெடுப்பது என்பதுதான் இருவரது அணுகுமுறையாகவும் இருக்கிறது.

**அண்டை வீட்டுக்காரர்கள்!**

எம்.ஆர் - 2004 உருவாக்கியிருக்கும் திடீர் ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியில் நூற்றுக்கணக்கான அமைப்புகள் பங்கேற்கின்றன. திகாயத், நஞ்சுண்டசாமி போன்றோரில் தொடங்கி இசுலாமிய மதவாத அமைப்புகள், பிற்படுத்தப்பட்டோர் நலச் சங்கங்கள், தன்னார்வக் குழுக்கள் ஆகிய அனைவரும் இதில் அடக்கம். அணி சேர்க்கையின் அடிப்படையிலும், ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கான கண்ணோட்டத்தை விவாதித்து உருவாக்க வேண்டும் என்ற 'கொள்கைப் பிரகடனத்தின்' அடிப்படையிலும் இது ஒரு குட்டி உலக சமூக மன்றமாகவே தோற்றமளிக்கிறது. அந்த வகையில் எம்.ஆர் - 2004 ''உலக சமூக மன்றத்தை நாங்கள் எதிர்க்கவில்லை'' என்று கூறுவதிலும் ஆழ்ந்த பொருள் இருக்கத்தான் செய்கிறது.

தனது சொந்தக் காலில் நின்று ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தையோ, பார்ப்பன - பாசிச எதிர்ப்பு இயக்கத்தையோ கட்ட முனையாமல், முலாயம் முதல் ஜெயலலிதா வரையிலான பலரையும் அவ்வப்போது பிரித்துக் கோர்த்து 'முன்னணிகளை' உருவாக்கும் 'மார்க்சிஸ்டு'களின் தந்திரத்தை அப்படியே பின்பற்றுகிறது எம்.ஆர் - 2004.

''இடது சந்தர்ப்பவாதமும், வலது சந்தர்ப்பவாதமும் அண்டை வீட்டுக்காரர்கள்'' என்றார் லெனின். இவ்வளவு நெருக்கமான அண்டை வீட்டுக்காரர்களாக இருப்பார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவியலாது. இந்த உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனி போலக் கண்டுகொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த எதிரிகளுக்கு - உலக சமூக மன்றத்திற்கு - நன்றி சொல்வோம்.

வலது, இடது சந்தர்ப்பவாதங்களுக்கெதிரான நமது போராட்டத்தைத் தொடர்வோம்!

— ஆசிரியர் குழு

www.padippakam.com



# ஏகாதிபத்தியத்தைத் தகர்த்தெறிவோம்!

# உலக சமூக மன்றத்தை அம்பலப்படுத்துவோம்!

## சோசலிசமே மாற்று என முழங்குவோம்!

## அனைத்திந்தியக் கருத்தரங்கம்

**டாக்டர். அம்பேத்கர் பவன், தாதர், மும்பை.**

**சனவரி - 19,20 - 2004**

### நிகழ்ச்சி நிரல்

*கருத்தரங்கம் நான்கு அமர்வுகளாக நடத்தப்படும்*

- துவக்க அமர்வு
- ஏகாதிபத்தியத் தாக்குதலும் மக்கள் எதிர்ப்பும்:
  உலக வர்த்தகக் கழகம், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றால் திணிக்கப்படும் கொள்கைகள் மற்றும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போர்கள் தொடர்பாக...
- ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம்:
  சரியான திசைவழியும், விலகல் போக்குகளும்
- சோசலிச உலகமே மாற்று உலகம்!
  பங்கேற்கும் அமைப்புகளின் பிரதிநிதிகளும் அறிவுத்துறை முற்போக்காளர்களும் உரையாற்றுவர்.

மற்றும் புரட்சிகர கலைநிகழ்ச்சிகள்

*நாட்டுப் பற்றாளர்களே அணி திரண்டு வாரீர்!*

இவண்,
ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம்.

### பங்கேற்கும் அமைப்புகள்

*அனைத்திந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் (AIKMS)*
*இந்திய தொழிற்சங்க சம்மேளனம் (IFTU)*
*மக்கள் கலை இலக்கியக் கழகம் (PALA)*
*புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி (NDLF)*
*பிகுல் மஸ்தூர் தஸ்தா*
*திஷா சத்ர சங்கதன்*
*கிராந்திகாரி லோக் அதிகார் சங்கதன் (KLAS)*
*ஜன் சங்கர்ஷ் சங்கதன்*
*பிரகதி ஷீல் மகிலா சங்கதன், டில்லி.*
*பெண்டு மஸ்தூர் யூனியன், பஞ்சாப்.*
*முற்போக்கு ஜனநாயக இளைஞர் சங்கம் (PDSU)*
*முற்போக்கு இளைஞர் கழகம் (PYL)*
*முற்போக்குப் பெண்கள் அமைப்பு, ஆந்திரா (POW)*
*அருணோதயா, ஆந்திரா*
*பஞ்சாப் மாணவர் சங்கம் (PSU)*
*நவ் ஜவான் பாரத் சபா, உ.பி.*
*பரிவர்த்தன் சன்ஸ்கிருதிக் மஞ்ச், உ.பி.*
*லோக் ஷாஹீர் அனபாவ் சாத்தே அப்யாஸ் கேந்திரா, மகாராஷ்டிரம்.*
*ஸ்திரீ க்ருதி சமிதி, மகாராஷ்டிரம்.*

www.padippakam.com

## நகை தொழிலாளர்கள்:

# நலிவடையவில்லை, நசுக்கப்படுகிறார்கள்!

முதலில் விவசாயிகள், பிறகு ஆலைத் தொழிலாளர்கள், அப்புறம் நெசவாளர்கள்; இப்போது நகைத் தொழிலாளர்கள். உலகமயம், தனியார் மயம், தாராளமயம் என்கிற கொள்ளை நோயின் தாக்குதலால் இப்படி வரிசை வரிசையாகப் பலியாகிறார்கள். இனி இந்தக் கொள்ளை நோய் யாரை, எப்போது, எந்த வகையிலெல்லாம் தாக்கும் என்று தெரியவில்லை. இதனால், தொழில் இழந்து, வேலை இழந்து, வறுமை - பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படும் உழைக்கும் மக்கள், குடும்பம் குடும்பமாகத் தற்கொலை செய்து கொள்வது பெருகி வருகிறது.

தமிழ்நாட்டில் துணி ஆலைகள், வார்ப்படப் பட்டறைகள் ஆகியவற்றுக்கு அடுத்து தங்கநகைப் பட்டறைத் தொழில் மையமாக வளர்ந்துள்ளது, கோவை நகரம். புதிய தொழில் முனைவோர்களும், புதுப்பணக்காரர்களும் பெருகி நாட்டிலேயே வேகமாக வளர்ந்துவரும் பத்துப் பதினைந்து பெருநகரங்களின் வரிசையில் இடம் பிடித்துள்ளது, கோவை. இதற்குக் காரணம் அரசு பின்பற்றிவரும் புதிய பொருளாதாரக் கொள்கைதான் என்று பீற்றிக் கொள்ளப்படுகிறது.

ஆனால், இதற்கு நேரெதிர் விகிதத்தில்தான், இதே கோவை நகரில் பல்வேறு வகைத் தொழிலாளர்களும், கைவினைஞர்களும் தெருவில் விசிறியடிக்கப்படுகின்றனர். குறிப்பாக, உலகமயம், நவீனமயம், தாராளமயம் என்கிற பெயர்களில் தங்க நகைத் தொழிலில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களால் கடந்த சில ஆண்டுகளில் மட்டும் பல பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். சுமார் 400-க்கும் மேற்பட்ட நகைத் தொழிலாளர்கள் கோவையில் மட்டும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்.

1990-களில் புகுத்தப்பட்ட தாராளமயக் கொள்கையின்படி, தங்கம் இறக்குமதிக்கு இருந்த வரம்பு - தடையை மைய அரசு நீக்கியது. மேலும் உலகத் தரம் என்ற பெயரில் தரக்கட்டுப்பாட்டு விதிகளைக் கடுமையாக்கியது. வடநாட்டு நகை அடகுக்கடை சேட்டுகளில் பலர் ஏகபோக இடைத்தரகர்களாக மாறினர். கொள்ளை வட்டி தருவதாக பங்குகள் வசூலிக்கும் மோசடி நிறுவனங்கள் பெருகின. அந்நிய வங்கிகள் மூலம் ஏராளமான நுகர்வோர் கடன்கள், கடன் அட்டைகள் வழங்கப்பட்டன. இதனால் கவர்ச்சியூட்டப்பட்ட நகை வியாபாரம் பெருகியது. ஆனால், தொழிலாளர்களின் வாழ்வும் தொழிலும் நாசமடைந்தது.

கூடவே நகைத் தொழில் முதலாளிகள் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டனர். அவற்றில் ஒன்று ''டச்'' மோசடி. அதாவது ''24 காரட்'' தங்கத்தை வைத்து நகை செய்ய முடியாது என்பதால் வழக்கமாக 11 கிராம் தங்கத்துக்கு ஒரு கிராம் செம்பு சேர்த்து ''22 காரட்'' ஆக்கி நகை செய்து விற்பார்கள்; இதை ''96.1 டச்'' என்று சொல்வார்கள். 1990-களில் நகை வியாபாரம் பெருகியதைத் தொடர்ந்து, ஒரு கிராம் செப்புக்குப் பதிலாக 3 அல்லது 4 கிராமாக செப்பு உலோகத்தின் அளவைக் கூட்டி தங்க நகையின் தரத்தைக் குறைத்தனர். விற்பனையின் போது நுகர்வோருக்கு இந்த உண்மை தெரியவரும்போது, பட்டறைத் தொழிலாளர் மீது பழி போட்டனர்.

அடுத்து, ''செய்கூலி, சேதாரம் கிடையாது'' என்று விளம்பரம் செய்து இன்னொரு மோசடியில் ஈடுபட்டனர். இதுவரை பட்டறைத் தொழிலாளர்களுக்கு 10 சதவீதம் சேதாரம் என்றிருந்

**தற்கொலை செய்து கொண்ட நகை பட்டறை தொழிலாளர்கள்: தாராளமயம் - நவீனமயத்தின் கொடூர விளைவு. (நன்றி: நக்கீரன்)**





படிப்பகம்

www.padippakam.com



மீட்டர் வட்டிக் கொடுமையைத் தாங்க முடியாமல், இரண்டு முறை தற்கொலை செய்து கொள்ள முயன்ற கண்ணம்மா. இறந்து போன இவரின் கணவர் வாங்கிய கடன், மீட்டர் வட்டியால் ஒரே ஆண்டில் 25 இலட்சமாகிவிட்டது.

ததை 5% ஆகக் குறைத்தனர். அவர்களுக்கான கூலியையும் வெகுவாகக் குறைத்தனர். ''கேடிஎம் நகை'' என்கிற பெயரில் இன்னொரு மோசடியிலும் ஈடுபட்டனர். அதாவது தங்கத்தோடு ''கேட்மியம்'' என்கிற உலோகத்தைக் கலந்து தயாரிக்கப்படும் நகைகளை தங்கத்தின் எடையிலேயே நடப்பு விலைக்கே விற்கிறார்கள். அதோடு இந்தவகை நகைகளுக்கு 18 சதவீதம் தனியாகவும் விலைவைத்து வசூலித்துக் கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட மோசடிகளாலும் பெரும் எண்ணிக்கையிலான ''ஷோரூம்'' விற்பனையின் மூலமும் கொள்ளை லாபமடிக்கும் நகைத் தொழில் அதிபர்கள், நுகர்வோரை ஏய்த்துக் கொள்ளை லாபமடிப்பதோடு பட்டறைத் தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் செலவில் விளம்பரங்கள், அன்பளிப்புகள், ''ஷோரூம்'' அலங்காரங்கள், ''செய்கூலி சேதாரம் கிடையாது'' என்கிற பித்தலாட்டங்களால் நுகர்வோரை ஏய்க்கிறார்கள். இது தெரியாமல் படித்தவர்களும் பணக்காரர்களும் ஏமாறுகிறார்கள்.

ஆரம்பத்தில், இந்த நகைத் தொழில் அதிபர்கள், இடைத் தரகு வியாபாரிகளாகத்தான் இருந்தார்கள். சிறிய அளவிலான நகைப் பட்டறையாளர்களிடம் ஆர்டர் கொடுத்தும் தயார் நிலைநகைகளையும் வாங்கி விற்று வந்தார்கள். பிறகு, தரச்சோதனை என்கிற பெயரில் பட்டறை உற்பத்தியாளர்களையும், தொழிலாளர்களையும் தமது ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்தார்கள். அதாவது, தரப் பரிசோதனைக்கான நவீன எந்திரங்களை இறக்குமதி செய்தார்கள். பணபலமிக்க நகைத் தொழிலதிபர்கள், பட்டறை உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ''சப்ளை'' செய்யும் நகைகளைத் தரக்குறைவானவை, காலம் தாழ்த்திச் செய்யப்பட்டவை என்று கூறி இவர்களுக்குக் கிடைக்கும் சிறு இலாபம் மற்றும் கூலியையும் பிடுங்கிக் கொண்டார்கள். அதற்கு ஈடு கட்டவே கந்துவட்டி - மீட்டர்வட்டி வாங்கி இவர்கள் கடன்காரர்களாகிப் போனார்கள். கம்பிக்கடை, டைக்கடை, மெருகுக்கடை, கட்டிங்கடை என்று நான்கு கைமாறி செய்து முடிக்கப்படும் நகைகளில் ஏதாவது ஒரு இடத்தில் நேரும் சிறு குறைபாட்டை ''தரப்பரிசோதனையில் தேறவில்லை'' என்று கூறி பட்டறை உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர் வயிற்றிலடிப்பதே வழக்கமாகிப் போனது.

பிறகு, பெரும் நகைத் தொழிலதிபர்கள், ''காம்ப்ளக்ஸ்'' என்ற புதிய முறையைப் புகுத்தினார்கள். அதாவது வணிக வளாகத்தை வாடகைக்கு எடுத்து, ஏற்கெனவே வேலை இழந்த, வேலையின்றித் தவிக்கும் நகைத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கி (கடன் கொடுத்து, கடன்காரர்களாக்கி, அது தீரும் வரை அடிமைகளாக்கி வைத்து) வேலை வாங்கும் முறையே இந்த ''காம்ப்ளக்ஸ்'' - தொழிற்சாலை. கோவை நகரில் மட்டும் 60-க்கும் மேற்பட்டபட்ட ''காம்ப்ளக்ஸ்''கள் உருவாகியுள்ளன. இதில் அரசாங்கம் அறிவித்த குறைந்த பட்சக் கூலி, ஈ.எஸ்.ஐ. பி.எஃப், போனஸ், மற்றும் அரசு அறிவித்த விடுமுறை போன்ற எந்த விதிமுறையும் கடைபிடிக்கப்படுவதில்லை. சிறிய அறைகளில், - பன்றியை அடைத்து வைக்கும் பட்டிகளைப் போன்ற இடங்களில் வதியும் இவர்கள், நாள் ஒன்றுக்குப் 16 மணி நேரம் உழைத்தும் போதிய வருவாயின்றி மேலும் மேலும் கடனாளியாகித் தற்கொலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இன்னும் பல கொடுமைகள் இந்தக் ''காம்ப்ளக்சில்'' நடைபெறுகின்றன. புதிய ''பாம்பே டிசைன்'' என்கிற பெயரில் புதிய பாணியிலான ஆயத்த நகைகளைத் தயாரிக்க வங்கத்திலிருந்து குழந்தைத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாகக் கொண்டு வந்து ஆண்டுக்கு 500 முதல் 1000 ரூபாய் கூலி கொடுத்து சுரண்டுகின்றனர், நகைத் தொழிலதிபர்கள். பெண் தொழிலாளர்களுக்கு ஒருநாள் கூலி வெறும் 35 ரூபாய் என்று நிர்ணயித்துக் கசக்கிப் பிழிவதோடு பாலியல் வன்முறை - வக்கிரங்களுக்கும் பலியாக்குகிறார்கள்.

ஒரு கிராம், இரண்டு கிராம் தங்கம் ''காணவில்லை'' என்றால் ஆண்களும் பெண்களும் வேலை செய்யும் ''காம்ப்ளக்சில்'' நடத்தப்படும் வக்கிரமான சோதனைகளின் கொடுமை சொல்லில் அடங்காதவை. முழுவதும் நிர்வாணமாக்கி தலைமுடி முதல், விரலிடுக்கு வரை கையால் தடவியும் குனியும்படி செய்து ஆசன வாயில் ''டார்ச்'' அடித்துப் பார்த்தும் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. ஒரு காம்ப்ளஸ்சில் 1.8 கிராம் தங்கம் காணவில்லை என்பதற்காக பலர் முன்னிலையில் உள்ளாடையுடன் நிறுத்திப் பரிசோதிக்கப்பட்ட ஒரு பெண் தொழிலாளி, அவமானத்தால் மனமுடைந்து போய் தற்கொலைக்கே முயன்றிருக்கிறார்

இவையெல்லாம் போதாதென்று, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெரும் கொள்ளையடிப்பதற்கான ஒரு வாய்ப்பாக ''கிளஸ்டர்'' - ''நகைத் தொழில் பூங்கா'' என்கிற அமைப்பை உருவாக்கும் முயற்சியில், பாரம்பரிய நகைத் தொழில் சாராத வேறு பல தொழிலதிபர்களைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு பழைய நகைத் தொழிலதிபர்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர். இதனால், கோவையில் வாழும் தங்க நகைத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள 3 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்களோடு சுமார் 15 இலட்சம் தங்க நகைத் தொழிலாளர்கள் நசுக்கப்படுவார்கள் என்பது மட்டும் உறுதி.

தங்க நகைத் தொழிலை மேம்படுத்துவதாகக் கூறி 50 கோடி ரூபாயை


படிப்பகம்

www.padippakam.com

மானியமாக வழங்குவது என்று மத்திய அரசு தீர்மானித்துள்ளது. இதை அறிந்த தொழிலதிபர்கள் பலரும் அரசு தரும் மானியத்தோடு வெறும் 25 சதவீ தமே திரட்டி தாமும் ''கிளஸ்டரில்'' உறுப்பினரானால் கொள்ளை இலாபம் ஈட்டலாம் என்று சதி செய்து திடீர் என்று தங்க நகை வியாபாரிகள், தயாரிப்பாளர்கள் சங்கம், கூட்டமைப்புகளின் பெயரில் தீவிரமாக முயற்சிக்கிறார்கள்.

தற்போதைக்கு 5,400 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள் இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதில் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள் கோவையிலிருந்து ஏற்றுமதியாகின்றன. மொத்தம் 37,000 கோடி ரூபாய் நகைகளை ஏற்றுமதி செய்வது என்பது அரசின் இலக்காக உள்ளது.

இதற்காக உலகச் சந்தையில் போட்டியிடும் அளவுக்கு தரமான, புதிய புதிய வடிவமைப்புகளுடன் கூடிய நகைகளை விரைவாக உற்பத்தி செய்யும் இயந்திரங்களைப் புகுத்த வேண்டும் என்று திட்டமிட்டுள்ளது. நசிவடைந்த நகைத் தொழிலைக் காப்பது, நவீனப்படுத்துவது என்ற பெயரில் வரும் திட்டத்தின் பலனை அறுவடை செய்து கொள்ள முனையும் ஏகபோகத் தங்க நகைத் தாயரிப்பாளர்கள் - வேறு பிற தொழிலதிபர்கள், உண்மையில் தொழிலாளர்களை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை.

அரசியல், சாதி சமயமற்ற பொது நல அமைப்பு என்று கூறிக்கொள்ளும் இந்த ''கிளஸ்டர்'' அமைப்பு முறையில், தங்க நகை உரிமையாளர்களைத் தவிர பி.எஸ்.ஜி. குரூப், மற்றும் அமிர்தா இன்ஷ்டியூசன் ஆகியன ஒன்றே கால் கோடி அளிக்கிறது. இதன்மூலம் இங்கு படிக்கும் மாணவர்கள் மூலம் டிசைன் செய்ய ஒப்பந்தம் உள்ளதாக தெரிய வருகிறது. இவர்களுடைய நோக்கம் உலக மயம், நவீனமயம் என்ற போர்வையில் அரசு கொடுக்கும் சலுகைகளை விழுங்குவது. இதுவரை தரகர்களாக இருந்து வந்த இவர்கள், நவீன லேசர் கருவிகளை இறக்குமதி செய்து தயாரிப்பாளர்களாக மாறுகின்றனர். அதிக தொழிலாளர்களுக்கு வேலை என்றும், தொழில் கல்வியின் மூலம் தொழிலாளர்கள் தேர்ச்சியடைவது என்றும் பொய் மாணவர்களைக் காட்டி ஏய்க்கின்றனர். நகைகளை கம்ப்யூட்டரில் டிசைன் - வடிவமைத்த பின் அதை லேசர் இயந்திரத்தின் மூலம் அரை மணி நேரத்தில் உருவாக்குகின்றனர். இதன் முலம் தொழிலாளர் என்ற முறை போய், ''இஞ்சினியர்'' என்ற தகுதியுடன் ஒரே ஒரு நபர் மட்டும் அவர்களுக்குப் போதுமானது. பல டிசைன்கள் உடனுக்குடன் உற்பத்தி செய்ய முடியும்.

ஏற்கெனவே, கைவினைஞர்களாக இருந்த நகைத் தொழிலாளர்களிடமிருந்து உழைப்புத் திறனையும் (வினைத் தொழில் நுட்பத்தையும்), உழைப்புக் கருவியையும் அபகரித்துக் கொண்டு வெறும் கூலித் தொழிலாளர்களாக சந்தைக்கு விரட்டுகிறார்கள். அதோடு இலட்சக்கணக்கான கைவினைஞர்கள் பணிபுரிந்த தொழிலிலிருந்து அவர்களை விரட்டி விட்டு நவீன இயந்திரங்களைப் புகுத்தி சில ஆயிரம் கூலித் தொழிலாளர்களை வைத்து பகற்கொள்ளை அடிக்கப் போகிறார்கள்.

இதை ஓரளவு புரிந்து கொண்ட கோவை நகைத் தொழிலாளர்கள் கொதித்துப் போயுள்ளனர். கேள்வி மேல் கேள்வி கேட்கிறார்கள்.

''ஐந்து அறிவுள்ள ஜீவனை வதைத்தாலே தட்டி கேட்க நீலச்சிலுவை சங்கம் உள்ளது. நலிந்த நகை தொழிலாளர்களான எங்களை கேட்பதற்கு யாரும் இல்லை. 400 பேருக்கு மேல் மடிந்தும் மனித உரிமை கமிஷன் கண்டு கொள்ளவில்லை.

நலிந்த நெசவுத் தொழிலாளர்களுக்குக் கூட கஞ்சி தொட்டி அமைத்தார்கள். நலிந்த நகை தொழிலாளர்களுக்கு அந்த நாதியும் கூட இல்லை.

நலிந்த நகை தொழிலாளி மனிதர் இல்லையா? நலிந்த நாங்கள் மிருகங்களை விட கேவலமானவர்களா?

நலிந்தது நகைத் தொழிலா? இல்லை, தொழிலாளர்களான நாங்கள்தான்!

நவீனம் என்ற போர்வையில் நாசம் விளைவிக்க துடிக்கும் இந்த நவீன அமைப்பு எங்களுக்கு தேவையா? ஏற்கெனவே வந்த நவீனத்தால் நாங்கள் பட்டது போதாதா?

நலிவடைந்த நகை தொழிலாளர்களைப் பாதுகாக்க அரசாங்கம் என்ன செய்தது?''

புதிய பொருளாதாரக் கொள்கையால் வாழ்விழக்கும் ஒவ்வொரு பிரிவு மக்களும் இதே கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

**கோவை செய்தியாளர்கள்**
**உதவியுடன் மாணிக்கவாசகம்**

# ஆர்.எஸ்.எஸ். கைக்கூலிகளாக சாத்தூர் நகர போலீசு

அயோத்தியில் இந்துவெறி பாசிசக் காட்டுமிராண்டிகளால் பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாளான டிசம்பர் 6-ஆம் தேதியன்று, இந்துவெறி பாசிசத்தை எதிர்த்து தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பிரச்சார இயக்கத்தை வீச்சாக மேற்கொண்டன. விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் நகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டியதோடு, பேருந்து நிலையத்தில் டிசம்பர் 5-ஆம் தேதியன்று இந்துவெறி பாசிஸ்டுகளை எதிர்த்து தட்டி - பலகையை எழுதி வைத்தனர்.

அன்றிரவே, ஆர்.எஸ்.எஸ். கும்பலின் தூண்டுதலின் பேரில் சாத்தூர் நகர போலீசார், சுவரொட்டிகளைத் தேடித் தேடி கிழித்தெறிந்ததோடு, பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டிருந்த தட்டி - பலகைகளையும் கிழித்து எடுத்துச் சென்றனர். இதையறிந்ததும், டிசம்பர்-6 அன்று காலையில் பு.மா.இ.மு. தோழர்கள் பேருந்து நிலையத்தில் மீண்டும் ஒரு தட்டியைப் புதிதாகக் கட்டினர். இதைக் கண்டு பீதியடைந்த போலீசார், பெரும்பட்டாளத்துடன் வந்திறங்கி, தட்டியை உடனடியாக அகற்றாவிட்டால் கைது செய்வோம் என்று மிரட்டினர். தோழர்கள் இதற்கு அஞ்சாமல் உறுதியாக நிற்கவும், அவர்களைப் போலீசு நிலையத்துக்கு இழுத்துச் சென்று விசாரணை நடத்தினர். ''உங்களை 6 மணிவரை வெளியே விடக்கூடாதுன்னு எஸ்.பி. ஐயாகிட்டயிருந்து ஆர்டர் வந்திருக்கு!'' என்று மாலைவரை போலீசு நிலையத்திலேயே வைத்திருந்துவிட்டு, ''ஆர்.எஸ்.எஸ். பிரமுகர் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் உங்களை இங்கு கொண்டு வந்தோம்'' என்று கூறி தோழர்களை இரவு விடுவித்தனர்.

ஆர்.எஸ்.எஸ். கைக்கூலிகளாகச் செயல்படும் போலீசு, புரட்சிகர - ஜனநாயக இயக்கங்களின் பிரச்சாரத்தை ஒடுக்கி விட்டதாக மனப்பால் குடிக்கிறது. ஆனால், அது நெருப்பைப் பொட்டலம் கட்டிய கதையாகத்தான் முடியும்.

— புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, சாத்தூர்



படிப்பகம்

www.padippakam.com

தலையங்கம் தொடர்ச்சி

பிளவுவாதி, தேசத் துரோகி என்று அவதூறுப் பிரச்சாரம் செய்யப்படும். இதுதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - ஜெயலலிதா ஆகிய பார்ப்பன - பாசிச பயங்கரவாதிகளின் உத்தியாக உள்ளது. ஏனென்றால், பயங்கரவாத - பிளவுவாதப் பீதியூட்டி, அரசியல் எதிரிகள் மீது தேசத் துரோகிகள் என்ற முத்திரை குத்தி, அரசியல் ஆதாயம் தேடுவதுதான் இந்தக் கும்பலின் வழக்கமான அரசியல் அணுகுமுறையாக உள்ளது.



தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் அரசில் இருந்து தி.மு.க. விலகும் முடிவை அறிவிக்கும் கருணாநிதி; (உடனிருப்பவர்கள்) தி.மு.க.வின் மைய அமைச்சர்கள் டி.ஆர். பாலு (இடது) மற்றும் ஏ. ராஜா.

இந்த உண்மையைப் பகிரங்கமாக அறிவித்து, சொல்லப்பட்ட திராவிட இயக்கக் கொள்கைகளின் இலட்சியத்திலும் தமது சொந்த அரசியல் பலத்திலும் வலுவாகக் காலூன்றி நிற்பதற்குப் பதிலாக, அரசியல் சமரசம், சந்தர்ப்பவாதம் என்ற தனது ''அரசியல் சாணக்கியத்தன''த்தை வைத்தே காரியங்களைச் சாதித்துவிட முடியும் என்று கருணாநிதி நம்புகிறார். கழகத்தையும் காரியவாத, பிழைப்புவாத சக்திகளின் கூடாரமாக மாறுவதற்கு வழிவகுத்துவிட்டார். இவர்களை வைத்துக் கொண்டு நாற்காலிக் கனவுகளிலும் கூட்டணிக் கணக்குகளிலும் மூழ்குவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்!

கழகம் தனது சொந்த அரசியல் பலத்தில் தமிழ் மக்கள் ஆதரவைத் திரட்டிக் கொள்ளாது, நாடாளுமன்ற பலத்தை வைத்து மத்திய அரசின் தயவில் நிற்கும்வரை, நம்பிக்கை துரோகம் செய்வது, அலட்சியப்படுத்துவது, ஆட்சியைக் கலைப்பது, தமிழகத்திலுள்ள கழகத்தின் எதிரிகளைத் தூண்டிவிட்டு அடக்குமுறைகளை ஏவிவிடுவது, அதற்கு எதிரான முறையீடுகளைக் கண்டுகொள்ளாமலிருப்பது ஆகியவற்றை கருணாநிதி சந்திக்க வேண்டியிருப்பது தொடரத்தான் செய்யும். ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. ஆட்சியிடமிருந்து மட்டுமல்ல, தற்போது கருணாநிதி கூட்டணி அமைக்க முற்படும் காங்கிரசு ஆட்சியிடமிருந்தும் இதுதான் கடந்த 30 ஆண்டு கால அனுபவமாக இருந்திருக்கிறது. இருந்தபோதும் இந்த நச்சுச் சுழற்சியில் இருந்து கழகத்தைக் கருணாநிதி மீட்க மறுக்கிறார். இப்போது கூட தே.ஜ.கூ. மற்றும் அரசில் இருந்து தாம் விலகுவதற்குக் காரணம் மத்திய அரசு தம்மை அலட்சியமாக நடத்தியதையும், தமிழக பா.ஜ.க.வின் ஜெயலலிதா ஆதரவுப் போக்கும்தான் காரணம் என்று கூறும் கருணாநிதி, அவர்கள் மீது கடுமையான அணுகுமுறையைத் தவிர்த்து மென்மையாகவே பேசி வருகிறார்.

கூட்டணி வைக்கும் ஓட்டுக் கட்சிகள் மீது மட்டுமல்ல; போலீசின் இதயமே பழுதாகிப் போனது - காவல் துறை ஏவல் துறையாகிவிட்டது, தேர்தல் கமிசன் உட்பட அதிகாரவர்க்கம் ஆட்சியாளர்களின் எடுபிடியாகிவிட்டது, நீதிபதிகள் ''அநீதிபதி''களாகி, விலைக்கு வாங்கப்படும் தீர்ப்புகளை வழங்குகிறார்கள், நேர்மையாகவும், ஜனநாயக முறைப்படியாகவும் தேர்தல்கள் நடப்பதில்லை என்றெல்லாம் பலமுறை கருத்துத் தெரிவிக்கும் கருணாநிதி, இத்தகைய அரசியல் அமைப்புக்குள்ளாகவே உழன்று கொண்டிருக்கிறார். இதற்கு வெளியே சிந்திக்க முடியாமல் சிக்கிக் கொண்டிருக்கிறார்.

விரக்தியின் விளிம்பிற்கு அவரைப் பலமுறை தள்ளிவிட்ட ''காவல்துறை'', தேர்தல் ஆணையம், உச்ச - உயர் நீதிமன்ற அமைப்பு எல்லாம் அப்படியே நீடிக்கும் பொழுது ''புது''க் கூட்டணி, புதுக் கணக்குப் போட விழைகிறார் கருணாநிதி. தமிழ்நாட்டில் ஜெயலலிதா எதிர்ப்பு அலை வீசும் இன்றைய நிலையில் தி.மு.க. - காங்கிரசு - கம்யூ. கூட்டணி வெற்றிக் கூட்டணியாக அமையும் என்று அரசியல் நோக்கர்கள் கணிக்கிறார்கள். ஆனால், அனுபவங்களில் இருந்து பாடங்கள் கற்றுக் கொள்வதுதான் பகுத்தறிவு; அதை மறுத்து மீண்டும் மீண்டும் பழைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது மூட நம்பிக்கை. பகுத்தறிவு இயக்கம் என்று சொல்லிக் கொண்டு அரசியல் வாழ்வைத் தொடங்கிய கழகம், கூட்டணிக் கணக்குகளை நம்பி அரசியல் நடத்தும் இழிநிலைக்குள் சிக்கிக் கொண்டு விட்டது. இலட்சியம் - கொள்கை - சுயமரியாதை - பகுத்தறிவு எல்லாம் வெளியேறிவிட்டது. ●

**அனுபவங்களில் இருந்து பாடங்கள் கற்றுக் கொள்வதுதான் பகுத்தறிவு; அதை மறுத்து மீண்டும் மீண்டும் பழைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது மூட நம்பிக்கை. பகுத்தறிவு இயக்கம் என்று சொல்லிக் கொண்டு அரசியல் வாழ்வைத் தொடங்கிய கழகம், கூட்டணிக் கணக்குகளை நம்பி அரசியல் நடத்தும் இழிநிலைக்குள் சிக்கிக் கொண்டு விட்டது.**


படிப்பகம்

www.padippakam.com

# இந்து மதவெறியர்களின் சதி காங்கிரசின் காவடி

# கர்நாடகாவிலும் ஒரு அயோத்தி

கர்நாடக மாநிலத்தின் சிக்மகளூர் அருகேயுள்ள பாபாபூதான்கிரியில் ஒரு சூஃபி மார்க்க தர்கா உள்ளது. பல நூற்றாண்டுகளாக இதனை இந்துக்களும் முசுலீம்களும் வழிபாட்டுத் தலமாகப் பாவித்து வந்துள்ளனர். ஒப்பீட்டு ரீதியில் முசுலீம்களை விட இந்துக்கள் இந்த வழிபாட்டுத்தலத்தில் திரளுவதைச் சகிக்காத இந்து வெறியர்கள், 'இது இந்துக்களின் கோயில்; அன்னிய முசுலீம் ஆக்கிரமிப்பாளர்கள் பல்லாண்டுகளுக்கு முன்பு இங்கிருந்த கோயிலைச் சிதைத்து விட்டு தர்காவை நிறுவி விட்டனர்; எனவே, தர்காவை இவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டும்' என்று பொய்ப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டு வெறியூட்டி வருகின்றனர். இதற்காக தத்தா ஜெயந்தி விழா, ஷோப யாத்ரா முதலான இந்துப் பண்டிகை - விழாக்களை தமது நோக்கங்களுக்கேற்ப கேடாகப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர்.


1980-இல் சிக்மகளூர் மாவட்ட நீதி மன்றமும் கர்நாடக உயர் நீதிமன்றமும், 1975-ஆம் ஆண்டில் இந்த வழிபாட்டுத் தலம் எவ்வாறு இருந்ததோ, அதேநிலையில் வழிபாட்டு உரிமையைத் தொடர வேண்டும் என்றும், முசுலீம் மதகுரு தலைமையில் மட்டுமே அங்கு வழிபாட்டுக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளன. இருப்பினும், நீதிமன்றத் தீர்ப்பைத் துச்சமாக மதிக்கும் இந்துவெறியர்கள், அந்த தர்காவில் இந்துக் கடவுளர்களின் பொம்மைகளை வைத்து திடீர் பூசைகள் நடத்துவது, பெருந்திரளாக இந்து 'பக்தர்'களை வாகனங்களில் கொண்டு வந்து இறக்கி வழிபாடுகள் - விழாக்களை நடத்துவது என்று கிளம்பியுள்ளனர். இதன் மூலம் இந்த தர்காவைக் கைப்பற்றி ஆக்கிரமித்து இந்து கோயிலாக்கும் கீழ்த்தரமான சதியில் இறங்கியுள்ளனர்.

கடந்த 5,6 ஆண்டுகளாக பாபாபூதான்கிரியில் தத்தா ஜெயந்தி விழாவைக் கேடாகப் பயன்படுத்தி வரும் இந்துவெறியர்கள், பக்தர்கள் என்ற பெயரில் குண்டர்களை வாகனங்களில் ஏற்றிவந்து தர்காவை ஆக்கிரமித்து பூகைள் நடத்துகின்றனர். சிறுபான்மை முசுலீம்களை அன்னியர்கள், எதிரிகள் என்று அவதூறு செய்து கீழ்த்தரமாக கோஷம் போட்டுக் கொண்டு திடீர் யாகங்கள் நடத்தி ஆத்திரமூட்டி வருகின்றனர். இவ்வாண்டு டிசம்பர் முதல் வாரத்தில் விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள குண்டர்கள் பெங்களூரில் விராட் இந்து சமஜோத்சவம் எனும் அனைத்து இந்து எழுச்சி இயக்கத்தையும், அதைத் தொடர்ந்து பாபாபூதான் கிரியில் தத்தா ஜெயந்தி விழாவையும் கோலாகலமாக நடத்தி வெறியூட்டினர். ''அயோத்தியில் இராமன் கோயிலைக் கட்டுவோம்; பாபாபூதான்கிரியை இந்துக்களின் கோயிலாக மாற்றுவோம்'' என்று சூளுரைத்தனர். சிக்மகளூரில் ஷோப யாத்ரா என்ற பெயரில் விசுவ இந்து பரிசத் மற்றும் பஜ்ரங்தள குண்டர் படைத் தலைவர்கள் முசுலீம்களை மட்டுமின்றி, மதச்சார்பின்மை பேசும் அறிவுத்துறையினரையும் கீழ்த்தரமாக சாடி பொதுக்கூட்டம் நடத்தினர்.

இத்தனையும் பா.ஜ.க. ஆளும் இந்து இராஜ்ஜியத்தில் நடக்கவில்லை. பா.ஜ.க.வின் வகுப்புவாத வெறியை எதிர்ப்பதாக நாடமாடும் மதச்சார்பற்ற காங்கிரசு ஆளும் மாநிலத்தில்தான் நடந்துள்ளது. வரப்போகும் தேர்தலில் இந்து ஓட்டுக்களை இழந்துவிடாதிருக்க, பா.ஜ.க.வுடன் கள்ளக்கூட்டு சேர்ந்து கொண்டு, ஆளும் காங்கிரசுக் கட்சியும் மென்மையான இந்துவெறிப் பாதையில் பீடுநடை போடுகிறது. இந்து வெறியர்களின் வழியிலே, மதச்சார்பற்ற - ஜனநாயக இயக்கங்களின் மீது அடக்குமுறையை ஏவி ஒடுக்கவும் கிளம்பிவிட்டது.

கர்நாடகத்திலுள்ள ''சௌஹர்தா வேதிகி'' என்பது பல்வேறு மதச்சார்பற்ற - ஜனநாயக அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் கூட்டமைப்பாகும். இக்கூட்டமைப்பானது, இந்து வெறியர்களின் சதிகள் - சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தி மத நல்லிணக்கப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்துவெறியர்களின் தத்தா ஜெயந்தி விழா, தத்தா மாலே விழா, ஷோப யாத்ரா முதலானவற்றைத் தடை செய்யுமாறு இவ்வமைப்பினர் கடந்த டிசம்பர் முதல் நாளன்று முதல்வர் கிருஷ்ணாவிடம் மனு கொடுத்து, மதவெறிக் கலவரம் தலைதூக்காமல் தடுக்குமாறு கோரினர். இந்த விழாக்களும் யாத்திரைகளும் மதரீதியாக எவ்வித முக்கியத்துவமும் இல்லாத, இந்துவெறியர்களின் திடீர் விழாக்கள் என்றும் சுட்டிக் காட்டினர். ஆனால் கிருஷ்ணா அரசு, இந்துவெறியர்களின் இந்த விழாக்களுக்கு அனுமதியளித்ததோடு, பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்து கொடுத்து உதவியது. அதே சமயம், வேதிகி அமைப்பினர் சிக்மகளூர் நகரில் நடத்தத் தீர்மானித்திருந்த மத நல்லிணக்க கருத்தரங்கத்திற்குத் தடை விதித்தது.

**பாபாபூதான்கிரி தர்காவில் இந்துவெறியர்களின் சட்டவிரோத ஆக்கிரமிப்புக்குப் பாதுகாப்பு அளிக்கும் கர்நாடக போலீசு.**





படிப்பகம்

www.padippakam.com




பிரபல நாடகக் கலைஞர் கிரிஷ் கர்னாட் (இடமிருந்து மூன்றாவது) தலைமையில் நடந்த மதவெறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

டிசம்பர் 7-ஆம் நாளன்று நடைபெறவிருந்த இக்கருத்தரங்கம் தடைசெய்யப்பட்டதையொட்டி, வேதிகி அமைப்பின் முன்னணியாளர்கள் பல்வேறு மாவட்டங்களில் டிசம்பர்-6 அன்று இரவோடு இரவாக 'முன்னெச்சரிக்கையாக' கைது செய்யப்பட்டனர். ஹசன் நகரில் வேதிகி இயக்கத்துக்கு ஆதரவாக ஊர்வலம் நடத்த முயன்ற பல்வேறு முற்போக்கு அமைப்புகள் - இயக்கங்களைச் சேர்ந்த முன்னணியாளர்கள் கைது செய்யப்பட்டனர். பிரபல எழுத்தாளரான பானு முஸ்தாக் மற்றும் சி.பி.எம். மாநிலச் செயலாளர் நாகராஜ் ஆகியோரும் இதில் அடங்குவர்.

டிசம்பர் 7-ஆம் நாளன்று இக்கருத்தரங்கை பேலூர் நகரில் நடத்தத் தீர்மானித்த வேதிகி அமைப்பினர், பிரபல எழுத்தாளர்கள் - கலைஞர்களுடன் இரண்டு பேருந்துகளில் டிசம்பர் 6-ஆம் தேதியன்று இரவு பெங்களூரிலிருந்து வந்தனர். அவர்களை நள்ளிரவில் வழிமறித்த போலீசார், ஹசன் நகருக்குத் திரும்பி செல்லுமாறு எச்சரித்தனர். ஞானபீட பரிசு பெற்ற பிரபல நாடகக் கலைஞர் கிரிஷ் கர்னாட் மற்றும் பிற எழுத்தாளர்களும் கலைஞர்களும்தான் இப்பேருந்துகளில் வந்தவர்கள். ''எங்களுக்கே இந்த கதியா? நடப்பது காங்கிரசு ஆட்சியா? அல்லது மோடி ஆட்சியா?'' என்று அவர்கள் குமுறினர்.

மறுநாள் ஹசன் நகரில் வேதிகி அமைப்பினர் காங்கிரசு ஆட்சியாளர்களின் ஜனநாயக விரோதச் செயலை எதிர்த்து மனித சங்கிலி போராட்டமும் ஆர்ப்பாட்டம் - பொதுக்கூட்டமும் நடத்தினர். அதேநாளில் கருத்தரங்கத்துக்குத் தடை விதிக்கப்பட்ட சிக்மகளூர் நகரில் திடீர் தெருமுனைக் கூட்டம் நடத்த முயற்சித்த வேதிகி அமைப்பினர் அனைவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் லங்கேஷ் பத்திரிகா எனும் செய்தித்தாளின் ஆசிரியரான கௌரி என்பவரும் அடங்குவார். பிரபல எழுத்தாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்டு மதச்சார்பற்ற - ஜனநாயக அமைப்புகளின் கருத்துச் சுதந்திரத்துக்குக் கல்லறை கட்டி ஒடுக்கவும் கிளப்பிவிட்ட கிருஷ்ணா அரசுக்கு எதிராக பல முனைகளிலிருந்தும் கண்டனக் கணைகள் பெருகியதும், டிசம்பர் 8-ஆம் நாளன்று கைது செய்யப்பட்ட வேதிகி அமைப்பினரும் எழுத்தாளர்களும் கலைஞர்களும் விடுவிக்கப்பட்டனர்.

அதேசமயம், டிசம்பர் 7-8 தேதிகளில் இந்து வெறியர்கள் பாபாபூதான் கிரியில் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து பூசைகள், யாகங்கள், விழாக்கள் நடத்துவதற்கு கிருஷ்ணா அரசு எவ்வித தடையும் விதிக்காமல், முழுமையாக ஆதரித்து கைகட்டி நின்று சேவகம் செய்தது.

காங்கிரசு அரசின் இந்து வெறி சேவையைக் கண்ட சங்கப் பரிவாரங்கள் கள்ளும் சாராயமும் கலந்து குடித்த குரங்குகளாக ஆட்டம் போடுகின்றனர். சிக்மகளூரில் தத்தா ஜெயந்தி விழாவில் பேசிய விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள குண்டர்கள், வேதிகி அமைப்பினரையும் மதச்சார்பின்மை பற்றிப் பேசுவோரையும் தமது சாக்கடை வாயால் அவதூறு செய்து இழிவுபடுத்திச் சாடினர். பிரபல நாடகக் கலைஞர் கிரிஷ் கர்னாடை ''ஷெரீப்'' கர்னாட் என்றும், லங்கேஷ் பத்திரிகை ஆசிரியர் கௌரியை ''கோரி'' என்றும், முசுலீம்களின் கைக்கூலிகள் என்றும் இழிவுபடுத்தினர். இவர்களையும் மதச்சார்பின்மை பற்றிப் பேசுவோரையும் ''அர்த-மர்தா''க்கள் - அதாவது முசுலீம்களுக்குப் பிறந்த கலப்பின கள்ள வாரிசுகள் என்று அசிங்கப்படுத்தி, முசுலீம் நாடுகளுக்கு ஓடிவிடுங்கள்; இல்லையேல் இந்துக்கள் உங்களை செருப்பால் அடித்து நிர்வாணமாக்கி, கோமதீஸ்வரர் சிலைக்கு அருகே நிற்க வைப்பார்கள் என்று பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தனர். கிரிஷ் கர்னாடுக்குத் தரப்பட்ட ஞானபீட விருதைத் திரும்பப் பெற வேண்டும்; முசுலீம்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்; மதச்சார்பின்மை பற்றிப் பேசுவோர் தேசவிரோதிகள், பாக்.கைக்கூலிகள் என்றெல்லாம் இந்துவெறிபோதையில் கொச்சையாக ஏசி கொட்டமடித்தனர். ஆனாலும் காங்கிரசு அரசு, இந்துவெறியூட்டி ஆத்திமூட்டும் இப்பாசிச பயங்கரவாதிகளைத் தடுக்கவோ முடக்கவோ முன்வரவில்லை.

காங்கிரசு கட்சியை இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளுக்கு எதிரான கட்சியாக, மதச்சார்பற்ற அணிக்குத் தலைமை தாங்கும் தகுதியுடைய கட்சியாக போலி கம்யூனிஸ்டுகள் சித்தரித்து வருகிறார்கள். அதோடு கூட்டணி கட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கி, தேர்தல் பாதையின் மூலமாகவே இந்துவெறியர்களை வீழ்த்தி விடத் துடிக்கிறார்கள். ஆனால் காங்கிரசு கட்சியோ, தாங்கள் ஆளும் மாநிலத்தில்கூட இந்து வெறியர்களை எதிர்த்து நிற்பதில்லை. மாறாக, இந்து வெறியர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, மதச்சார்பற்ற - ஜனநாயக இயக்கங்களையே ஒடுக்கக் கிளம்பிட்டது. போலி கம்யூனிஸ்டுகள் பேசி வரும் மத நல்லிணக்கம், மதங்களின் ஒற்றுமை முதலான போலி மதச்சார்பின்மை வழியும் புதைகுழிக்குப் போய் விட்டது. ''மத நல்லிணக்கம் பேசாதே! மதத்தையும் அரசியலையும் பிரி! பார்ப்பன - இந்து வெறி பாசிச பயங்கரவாத்தை முறியடிக்க வீதியில் இறங்கிப் போராடு!'' - என்கிற உண்மையான மதச்சார்பின்மை பாதையில் உழைக்கும் மக்கள் அணி திரண்டு போராட வேண்டியதே இன்று அவசர அவசியமாகியுள்ளது.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழகப் போலீசு:
# வேலிகளா? காலிகளா?

பார்ப்பன பாசிஸ்ட்டு ஜெயா அரசின் போலீசு அக்கிரமங்கள் மூடிய கதவுகளைக்கூட உடைத்துக் கொண்டு வெளியே வருகின்றன. போலீசு பொறுக்கிகளின் ரௌடித்தனத்திற்கு வக்காலத்து வாங்கும் நீதிமன்றம் மற்றும் அதிகாரக் கும்பலின் மயிர் பிளக்கும் சட்ட விளக்கங்கள், விசாரணைகள் முதலானவை, ரணமான மக்களை மேலும் வதைக்கின்றன. கடந்த சில மாதங்களில், தமிழகத்தில் போலீசு கிரிமினல்கள் நட்டநடு ரோட்டில் பட்டப்பகலில் அரங்கேற்றிய ஆடை அவிழ்ப்புகள் - கற்பழிப்புகள் என்று சில சம்பவங்கள் இவைகள்;

காஞ்சிபுரம் மாவட்டம், கீழம்பி - கிருஷ்ணாபுரத்தில் வசித்தவர் பிரேமா; வயது 28; இரு குழந்தைகளுக்குதாய். இவருடைய கணவர், சுந்தரமூர்த்தி வாஸ்து சாஸ்திர சோதிடர். சில ஆண்டுகளுக்குமுன் பிழைப்புக்காக இவ்வூரில் குடியேறி ஊருக்கு ஒதுக்குபுறமாக குடிசையில் விசித்தவர்கள். அவ்வூரைச்சேர்ந்த சீட்டாட்ட ரௌடிக் கும்பல், இவர்களை வம்பிழுத்து வீடு புகுந்து தாக்கியது. இது சம்பந்தமாக போலீசுக்குப் புகார் கொடுத்தார், பிரேமா. புகாரை விசாரிக்க வந்த சம்பந்தப்பட்ட ரௌடிக்கும்பலின் உறவினரான போலீசுக்காரன் சுந்தரமூர்த்தி, பிரேமாவை ஊருவிட்டு ஊரு வந்து ''தேவடியாள்'' தொழில் செய்வதாக பட்டம் கட்டி ஏசினார். ''ஊர்க்காரர்களையே போலீசில் காட்டிக் கொடுக்கிறாயா?'' என்று அவரது கணவரையும் அழுத குழந்தைகளையும் சரமாரியாகத் தாக்கினார். ''தீவிரவாதி என்று சொல்லி உள்ளே தள்ளிவிடுவேன்; ஜாக்கிரதை!'' என்று மிரட்டினர்.

போலீசு பாதுகாப்புடன் திரிந்த ரௌடிகள், பிரேமா குடும்பத்தினர் தூங்கும்போது வீட்டுக்கு பூட்டுப் போட்டு தீவைத்தனர்; பிரேமாவும் அவரது கணவரும் கடப்பாரையைக் கொண்டு கதவை உடைத்துக் கொண்டு தப்பி, திரும்பவும் போலீசுக்கு புகார் கொடுத்தனர். தீயணைப்பு வண்டி வந்து தீயை அணைத்தது. இவ்வளவு நடந்த பிறகும் ரௌடிகள் மீது எந்த கைது நடவடிக்கையும் எடுக்கவில்லை, போலீசு. ரௌடி - போலீசு கூட்டை உயரதிகாரிகளுக்குத் துணிந்து புகார் அனுப்பினார் பிரேமா. 1.9.2003, 9.9.03, 22.9.03; மற்றும் 17.11.03 என்று தொடர்ச்சியாக, பாலுசெட்டி சத்திரம் போலீசு நிலையம், தாலுகா மகளிர் காவல் நிலையம், காஞ்சிபுரம் ஆட்சியர், எஸ்.பி; டி.ஐ.ஜி; சி.எம்.செல், மனித உரிமை கமிஷன் என்று ஒவ்வொரு இடமாகப் புகார் மனுக்களைத் தூக்கிக் கொண்டு அலைந்தார், பிரேமா. கணவரை மருத்துவமனையிலும், குழந்தைகளை உறவினர் வீட்டிலும் விட்டு விட்டு புகார் மனுவை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் போராடினார். ஆனால் கிடைத்த பலனோ, போலீசின் நக்கலும், ரௌடிகளின் சீண்டலும்தான்.

26.11.03 அன்று பட்டப்பகலில் மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் வாரந்தோறும் நடக்கும் ''குறை தீர்க்கும்'' நாளன்று, பெரும் திரளான மக்களுக்கு நடுவில், ஆட்சியரின் கண்முன்னே மண்ணெண்ணெய் ஊற்றித் தற்கொலை செய்து கொண்டார்.

பிரேமாவின் கணவர் இப்போது தன்னுடைய இரண்டு குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு மனு கொடுக்கும் வேலையைத் தொடர்கிறார்; ''விடுநர், பெறுநர், அய்யா, பொருள்: பிரேமா தீக்குளிப்பு சம்பந்தமாக'' இப்படித் தொடர்கிறது, அவரது புகார் மனு. எங்கு நடக்கும் இந்த அக்கிரமம்! ஒரு கொலையே நடந்த பிறகும், எந்த பதற்றமும் இல்லாமல் மாவட்ட ஆட்சியரும், மாவட்ட போலீசு கண்காணிப்பாளரும் இப்போது, நுணுக்கமாக சட்ட விளக்கம் கொடுக்கிறார்கள்.

இந்த 'ஜனநாயக' பொறுக்கிகளுக்கு எதிராக, உண்மையான ஜனநாயக சக்திகள், மனித உரிமை அமைப்புகள், ''மக்கள் மன்றம்'' போன்ற மக்கள்திரள் அமைப்புகள் தெருவில் இறங்கிப் போராடிய பிறகு சம்பந்தப்பட்ட போலீசு கிரிமினல்களை, வேலை நீக்கம் செய்வதாக கண்துடைப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளது, உயரதிகார வர்க்கம்.

●●●

சென்னை - சூளை, தட்டாங்குளம் பகுதியைச் சேர்ந்தவர், கோவிந்தராஜ்; வயது 24; கூலித் தொழிலாளி; சமீபத்தில் திருமணமானவர். தன் தம்பியுடன், டிசம்பர் மாதம் 12-ஆம் தேதி பகல் 2 மணிக்கு அருகிலிருந்த ஒலி நாடா கடைக்குச் சென்றார். 'கேசட்' வாங்குவது சம்பந்தமாக கடைக்காரருக்கும் அவருக்கும் வாய்த்தகராறு நடந்தது.

அப்போது புளியந்தோப்பு போலீசு துணை ஆய்வாளர் டில்லிபாபு அத்தெருவில் சென்றார். ஏற்கெனவே, கடை முதலாளியான மார்வாடியின் எச்சில் மாமூலில் இவர் ருசிகண்டவர் என்பதால், கோவிந்தராஜ் மற்றும் அவரது தம்பியையும் மிரட்டி ஜீப்பிலேயே போலீசு நிலையம் இழுத்துச் சென்றார். பிறகு, வலிப்பு நோய் கண்டு கோவிந்தராஜ் இறந்து விட்டதாக அவரது பிணத்தை ஒப்படைத்தது, போலீசு.

விசாரணை என்று போலீசு நிலையத்தில் கோவிந்தராஜை அடித்து சாகடித்த துணை ஆய்வாளர் டெல்லிபாபுவைக் கைது செய்ய வேண்டும் என்று பிணத்தை வாங்க மறுத்து தலித் மக்கள் வீதியில் திரண்டு போராடினர். மக்கள் கோபத்திலிருந்து தப்பிக்க, டில்லிபாபுவை தலைமறைவாக வைத்துக் கொண்டது உயர்போலீசு.

இது சம்பந்தமாக, நேரடியாக விசாரணை கோரிய, விடுதலை சிறுத்தைகள் இயக்கத்தின் அமைப்பாளர் திருமாவளவன் மற்றும் குடியரசுக் கட்சித் தலைவர் செ.கு.தமிழரசன் ஆகியோரிடம் சமரச நாடகமாடி ஏய்த்தது, போலீசு. வழக்கம் போல ''கலெக்டர் விசாரணை'' செய்வார் என்று



படிப்பகம்

www.padippakam.com





போலீசும், ரவுடிகளும் கூட்டுச் சேர்ந்து கொண்டு நடத்திய அட்டூழியத்திற்கு எதிராகத் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்ட பிரேமா; (இடது ஓரம்) பிரேமாவின் கணவர் சுந்தரமூர்த்தி.

இப்போது கதையை முடித்துவிட்டது, போலீசு.

●●●

பட்டப் பகலில் போலீசு கும்பல் நடத்திய ஆடை அவிழ்ப்பு, கற்பழிப்பு முயற்சி இது.

மதுரை அருகிலுள்ள சிலைமான், கோழிமேடு பகுதியில் வசிக்கும் கூலி தொழிலாளியின் மகள், முருகேஸ்வரி. ஆதரவற்ற குடும்பத்தில் வறுமைக்கும் நடுவே, இளங்கலை படித்து தனியார் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்ப்பவர். 9.8.03 அன்று தன்னுடைய சின்னம்மாள் மகளான விஜயநாகராணி மற்றும் தன் சகோதரரான ஆனந்தனுடன் பேருந்து நிறுத்தத்துக்கு மிதி வண்டியில் சென்றார். விரகனூர் மதகு அணையின் சாலையோரத்தில் குடி போதையில் நின்றிருந்த இரண்டு போலீசுக்காரர்கள், ''எங்கடா, இவளுகள கூட்டிட்டு பிராத்தல் பண்ணப் போறீயா?'' என்று கழிவுகளுக்கு அலையும் பன்றிகள் மாதிரி உறுமினர். அதற்கு முருகேஸ்வரி, தான் ஆசிரியை என்றும் ''சந்தேகம் என்றால் கோழிமேட்டிற்கு வந்து விசாரித்துக் கொள்ளுங்கள்'' என்றார் கூழைக்கும்பிடு போடாமல், சரியான பதிலைச் சொன்னதும் அதைத் தாங்க முடியாமல் போலீசுக்கு மூக்கு விடைத்துக் கொண்டது. முருகேஸ்வரியை இழிவாக ஏசி கையைப் பிடித்து இழுத்தனர்.

இதை எதிர்த்து கண்டித்த ஆனந்தனை நடுரோட்டிலேயே போட்டு உதைத்தது, போலீசு. தப்பித்து வீட்டுக்கு ஓடிய ஆனந்தனையும் அவரது சகோதரிகளையும் ஒரு போலீசு மோட்டார் சைக்கிளில் துரத்தியது. இன்னொரு போலீசு, வழியில் சென்ற வேனை மடக்கி ஏறி, ஆனந்தனின் மீது மோதியது. தட்டுதடுமாறி, தன் இன்னொரு சகோதரியின் வீட்டு முன்னால்போய் விழுந்தார், ஆனந்தன். இதைக்கண்டு அதிர்ச்சியுற்ற அவரது சகோதரி முத்துலட்சுமி மற்றும் உறவினர்கள் போலீசிடம் கதறியபோது அவர்களை பிடித்துத் தள்ளிய போலீசு, ஆனந்தனை பூட்ஸ் காலால் மாறிமாறி உதைத்தது.

இதைக் கண்டு பொறுக்க முடியாத ஊர் மக்கள் போலீசை சிறைபிடித்தனர். சிலைமான் போலீசு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். மதியம் 2 மணிக்கு நடந்த இச்சம்பவத்தை விசாரிக்க மாலை 6 மணிவரை போலீசு அதிகாரிகள் வரவில்லை. கோபமடைந்த மக்கள், இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட்டனர். உடனே வந்திறங்கியது, உயர் போலீசு கும்பல். வழக்கம் போல சமரச நாடகமாடியது. ஊர் மக்கள், சமரசத்தை எதிர்த்தனர். போலீசு குற்றவாளிகளுக்கு உடனே தண்டனை வழங்க வேண்டும் என்று மறியலைத் தொடர்ந்தனர். வேறுவழியின்றி, பிணையில் விடும் பிரிவுகளின்கீழ் குடிகார - கொலைகார - காமவெறி பிடித்த போலீசார் மீது வழக்கு பதிவு செய்ய போலீசு அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

விசாரணை என்ற பெயரில் இப்போது பாதிக்கப்பட்ட முருகேஸ்வரியை தொடர்ச்சியாக மிரட்டுகிறது, போலீசு. இதனால், முருகேஸ்வரிக்கு ஆசிரியை வேலையும் தடைப்பட்டது. அவருக்கு நடந்த திருமண ஏற்பாடுகளும் நின்றுபோனது. போலீசு தாக்குதலால் நிரந்தர நெஞ்சுவலிக்கு ஆளான சுமை தூக்கும் தொழிலாளியான ஆனந்தன், வேலை செய்ய முடியாமல் முடங்கிப் போனார்.

**போலீசு உடந்தையுடன் நடக்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, மோசடிகளைத் தண்டிக்கும் நீதிமன்றத் தீர்ப்புகள், ''பேண்டவனை அடிக்காமல், பீயை அடித்த கதையாக'' மூக்கில் நாறுகிறது.**

●●●

''நக்சலைட்டு வேட்டை''க்காக, தர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளி பகுதியில் தங்கியிருக்கும் சிறப்புக் காவல் படையின் மதம் பிடித்த அட்டகாசம் இது!

மூடப்பட்ட போச்சம்பள்ளி கூட்டுறவு பருத்தி குடோனிலும் மேலும் அதற்கு அடுத்து 50 ஏக்கர் பரப்பளவுள்ள முகாமிலும் பன்றிகள் போல் தீனிபோட்டு வளர்க்கப்படும் சிறப்புக் காவல்படை, குடும்பப் பெண்களை நோட்டமிடும் திணவோடு திரிகிறது.

போச்சம்பள்ளி - ராசி தியேட்டருக்கு குடும்பத்தோடு வரும் பெண்களை, கணவர் முன்பே தரக்குறைவாகப் பேசி நக்கல் செய்வது, சீண்டுவது என்று தியேட்டரில் டிக்கெட் எடுக்காமல் ஓசியில் சொறி நாய்கள் போல் சுற்றுகின்றன. இதை எதிர்த்துக் கேட்கும் தியேட்டர் முதலாளியையும் கிராமத்தவரையும் ''பார்க்கும் விதத்தில் பார்த்துக் கொள்வதாக'' அவை மிரட்டுகின்றன.

தர்மபுரி மாவட்டம், குறிஞ்சி நகரைச் சேர்ந்தவர் சாரதா. இவர், ஜம்பு பாளையம் காட்டுவழியே சென்ற போது, அங்கு சுற்றிக் கொண்டிருந்த அரவக்குறிச்சி போலீசார் 4 பேர், சாரதாவை இழுத்துச் சென்று கும்பல் வன்புணர்ச்சி செய்தனர். உயிர் மீண்ட சாரதா, மாவட்ட போலீசு கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர், மற்றும் மனித உரிமை கமிஷன் ஆகியவற்றுக்கு புகார் மனு கொடுத்தார். அவர்கள் கேட்ட கேள்விகளால் அவர் மேலும் அவமானப்பட்டதுதான் மிச்சம்.

28.10.03 அன்று மதுரையில் கூடிய தேசிய, மாநில மகளிர் ஆணைய விசாரணையின் போது சாரதாவும் தனது புகாரைக் கூறினார். இப்பாலியல் வன்கொடுமையைப்


படிப்பகம்

பார்த்த 15 வயது வஜ்ரவேலு என்ற சிறுவன், விசாரணையில் துணிந்து சம்பந்தப்பட்ட போலீசை அடையாளம் காட்டினான். கடைசியில், ஆணையமும் வெத்து வேட்டாகி போனது. கொழுப்பெடுத்து திரியும் போலீசுக்கு அது ''மனிதாபிமான'' அறிவுரை கூறி, ''கடும் கண்டனம்'' தெரிவித்தது.

ஜெயலலிதாவின் டான்சி தீர்ப்பு போலவே, தேசிய மகளிர் ஆணையமும் ''போலீசார் மனசாட்சிப்படி செயல்பட்டால், இதுமாதிரியான கமிஷன்கள் தேவையில்லை'' என்று திருவாய் மலர்ந்தது.

●●●

போலீசின் மனசாட்சியோ எல்லா கட்டத்திலும் ஒரேமாதிரிதான் இருக்கிறது!

கடலூர் மாவட்டம், நெய்வேலி புதுநகர், 30-வது வட்டம், இளங்கோ தெருவில் சக்ரவர்த்தி - ஜெனக்கா தம்பதியினர் வசிக்கின்றனர். அங்குள்ள புனிதபால் பள்ளி வழியே சென்ற போது, அவ்வழியே வந்த நெய்வேலி என்.எல்.சி. நிறுவன தொழிலகப் பாதுகாப்பு படையைச் சேர்ந்த போலீசு ஹரீம்கேஜி, திடீரென ஜெனக்காவை வெறியோடு அணைக்க, அதிர்ச்சியில் உறைந்தார் ஜெனக்கா. அவரது கணவர் சக்கரவர்த்தி, போலீசை இழுத்து பிடிக்க, ஆத்திரமடைந்த போலீசு மிருகம் சக்கரவர்த்தியைப் போலீசு தடியால் தாக்கியது. தற்செயலாக, அவ்வழியேபோன இருவர், போலீசை பிடித்து தெர்மல் ஸ்டேஷன் போலீசு நிலையத்தில் ஒப்படைத்தனர். இப்போது போலீசு விசாரணை 'வழக்கம்போல்' நடக்கிறது.

●●●

போலீசு கும்பல் சமீபத்தில் நடத்திய திருட்டு, வழிப்பறி, கொள்ளையில் சில சம்பவங்கள் இவை:

மதுரை நரிமேடு சிங்கராயர் காலனியைச் சேர்ந்தவர் ரவிக்குமார்; லாரி அதிபர். இவர், தனது நிறுவனத்தில் வசூலான ஒரு லட்சத்து முப்பத்தேழாயிரம் ரூபாயை வீட்டிற்குக் கொண்டு சென்றார். எதிரில், மோட்டார் வண்டியில் வந்த மூன்றுபேர், ரவிக்குமாரை கீழே தள்ளிவிட்டு பணத்தை பிடுங்கி சென்றனர். விசாரணையில், இக்கொள்ளைக்கு திட்டம் வகுத்துக் கொடுத்தது, மதுரை திடீர் நகர் போலீசுக்காரர் மோகன் என்பது நீதிமன்றத்தில் அம்பலமானது.



2 கோடி ரூபாய் மதிப்புள்ள வீட்டை, ஏமாற்றி வாங்கியதற்காகக் கைது செய்யப்பட்டுள்ள கிரிமினல் போலீசுக்காரன் ராமநாதன்.

சென்னையில், நவம்பர் மாதம் போதைப் பொருள் தடுப்பு போலீசாரால், 10 பேர் கொண்ட போதை பொருள் விற்கும் கும்பல் சுற்றிவளைக்கப்பட்டது. விசாரணையில் வெறும் யூரியா உரத்தை, போதைப்பவுடர் என்று விற்க முனைந்தது தெரிய வந்தது. இதில், பிரின்ஸ் என்ற தூத்துக்குடி ஆயுதப்படை போலீசும் செல்வின் என்ற சென்னை ஆயுதபடை போலீசும் கையும் களவுமாக பிடிப்பட்டனர்.

இன்னும், காரை திருடிவிற்கும் போலீசு, விபச்சாரிகளை வைத்து 'தொழில்' நடத்தும் போலீசு, கள்ளச் சாராயத்தை வீட்டில் இருப்பு வைத்திருந்த போலீசு, கந்துவட்டி போலீசு, கங்காணி போலீசு, மற்றும் போலீசு மாமா, போலீசு மச்சான், போலீசு தம்பி, போலீசு அப்பா, போலீசு கணவர் - என்று குடும்பம் குடும்பமாக, கும்பல் கும்பலாக 'சுதந்திர போராட்டத்தில்' ஈடுபடுவது மாதிரி கிரிமினல் தொழிலில் இறங்குகிறது, போலீசு.

இந்த சமூக கிரிமினல் குற்றங்களுக்கெதிராக நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகள் விநோதமாக இருக்கின்றன. போலீசு உடந்தையுடன் நடக்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, மோசடிகளைத் தண்டிக்கும் நீதிமன்றத் தீர்ப்புகள், ''பேண்டவனை அடிக்காமல், பீயை அடித்த கதையாக'' மூக்கில் நாறுகிறது.

இந்த லட்சணத்தில் விளக்குமாற்றுக்கு பட்டுக்குஞ்சம் போல, 'ஹை-டெக்' போலீசு நிலையங்கள், வீடியோ கான்பிரன்சிங், மொபைல் செட், லாப்-டாப் கம்ப்யூட்டர் மற்றும் வீரப்பதக்கங்கள், ஊக்கப் பரிசுகள் என்று ஜெயா அரசு போலீசை 'சேட்லைட்' பணக் கூடையில் கவிழ்த்து பராமரிக்கிறது. போதாக்குறைக்கு போலீசின் குற்றங்களுக்கு விநோத நீதிகளை விரைந்து வழங்க உயர்நீதிமன்றம், மதுரை, திருச்சி என்று பல கிளைகளை திறக்க முயற்சிக்கிறது.

சில்லரைக் குற்றங்களுக்காக பிடிக்கப்படும், நகர்ப்புற - கிராமப்புற சேரி மக்கள் போலீசின் நிரந்தர சித்திரவதைக்கு ஆளாகின்றனர். குற்றங்களிலிருந்து மீண்டு, மீண்டும் கௌரவமிக்க குடிமக்களாக வாழ்வதென்பது அவர்கள் கனவிலும் நடக்காது. நீதிமன்றங்களால், அவர்கள் விடுவிக்கப்பட்டாலும், போலீசின் கீழ்த்தரமான கண்காணிப்பிலிருந்து வாழ்நாள் முழுக்க அவர்களால் தப்பிக்க முடிவதில்லை. இந்த அநியாயத்தைத் துணிந்து எதிர்ப்பவர்கள், போலீசு காவலிலும், சிறைக் கொட்டடியிலும், மோதலிலும் கொல்லப்படுகின்றனர்.

ஆனால், தமிழகம் முழுக்க பரந்து விரிந்து கிடக்கும் 'மாபியா' ரௌடிகள் சுதந்திரமாக 'தொழில்' செய்து கொண்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டாலும் எதிரி கும்பலின் தாக்குதலிருந்து தப்பிக்கவே அவர்கள் கைது ஆகிறார்கள். உயர் பாதுகாப்பு வளையமான சிறையில் இருந்து கொண்டே, சிறையையே தங்கள் தொழில் நடத்தும் அலுவலகமாக மாற்றிக் கொள்கிறார்கள்.

குரங்கு குமார், புல்லட் ராஜேந்திரன், வெள்ள குமார், செல்வின், காட்டான் மாரி என்று தமிழகம் முழுக்க 'தாதா'க்கள் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். பெயர்தான் இப்படி முகம் சுளிக்கிற மாதிரி இருக்கும். ஆனால் ஆட்களோ, 'கார்பரேட்' நிறுவன அதிகாரிகள் மாதிரி அதிநவீன உடைகளிலும், அதிநவீன கார்களிலும் வந்திறங்குவார்கள். கொல்லப்பட்ட அயோத்திக் குப்பம் வீரமணி மாதிரி, சாகும் வரையில், போலீசு, அரசியல், அதிகார-சாதிய உயர் மட்டங்களுக்கு வேலை செய்வார்கள்.

இதில் பாதிக்கப்படுவது மக்கள் தான்! பாவம்! கொலைகாரர்களிடமே நீதிகேட்டு அவர்கள் வாழ்நாள் முழுக்க புகார் மனுக்களைச் சுமந்து அலைந்து கொண்டிருக்கி றார்கள்.

**மதுரை பு.ஜ. செய்தியாளர்கள் உதவியுடன் பச்சையப்பன்.**

www.padippakam.com

# பொடா சட்டத் திருத்தங்கள்:

# புண்ணுக்குப் புனுகு

''பொடா சட்டம் தீவிரவாதிகள் மீது மட்டும்தான் பாயும்; 'தடா' சட்டத்தைப் போல் இல்லாமல், பொடாவில் பாதுகாப்பு அம்சங்கள் இருப்பதால், அதனைத் தவறாகப் பயன்படுத்த முடியாது'' என்ற வாதத்தைத் திரும்பத் திரும்பக் கூறிதான், இந்து மதவெறி பாசிச கும்பல் பல்வேறு எதிர்ப்புகளிடையே இச்சட்டத்தைக் கொண்டுவந்தது. இப்படி சைவப்புலியாகக் காட்டப்பட்ட பொடா, இன்று சாயம் போன நீல நரியைப் போல அம்பலப்பட்டு நிற்கிறது.

மைய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, கடந்த அக்டோபர் முதல் தேதி முடிய, நாடெங்கிலும் 1600 பேர் மீது பொடா வழக்குகள் பதியப்பட்டு, அவர்களுள் 514 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஜார்கண்டு மாநிலத்தில், பன்னிரெண்டு வயதுக்குக் குறைவான சிறுவர் - சிறுமியர்கள் மீது கூட ''தீவிரவாதத் தடுப்பு'' பொடா சட்டம் பாய்ந்திருக்கிறது. தமிழகத்தின் பதினைந்தே வயதான பிரபாகரன், பகத்சிங் என்ற இரண்டு சிறுவர்கள் பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டு, பின்னர் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். தமிழகம் முழுவதையுமே பயங்கரவாதம் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவித்து, ஜெயா, தன்னை பொடா ராணியாகக் காட்டிக் கொண்டுள்ளார். இதனால், தமிழகத்தில் சவரக்கத்தி வைத்திருப்பவர்களைக் கூட, பயங்கரவாதியாக முத்திரை குத்தி, உள்ளே தள்ளிவிட முடியும்.

நாடெங்கும் பகிரங்கமாக ஆயுதப் பயிற்சி எடுத்து வரும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் மீது பாயாத பொடா, ஆந்திராவிலும், ஜார்கண்டிலும், தமிழகத்திலும் நக்சல்பாரிகள் மீது குறிவைத்து ஏவப்படுகிறது. குஜராத்திலும், மகாராஷ்டிராவிலும் பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் முசுலீம்கள் தான்.

மதுரை திருமங்கலம் பகுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் பொடாவில் கைது செய்யப்பட்டுள்ள ம.தி.மு.க. தலைவர்களுள் பூமிநாதனும் ஒருவர். அப்பொதுக்கூட்டத்தில் பேசியவர் திருமங்கலம் நகரின் ம.தி.மு.க. செயலாளர் பூமிநாதன்; ஆனால், பொடாவில் கைது செய்து உள்ளே தள்ளப்பட்டவரோ வேறொரு பூமிநாதன். தமிழக போலீசு ஆள்மாறாட்டம் செய்திருப்பது வழக்கு விசாரணை தொடங்கியவுடனேயே அம்பலமாகிவிட்டது. ஆனாலும், இவ்வழக்கை விசாரித்துவரும் பூந்தமல்லி பொடா சிறப்பு நீதிமன்றத்தில், அப்பொதுக் கூட்ட ஒளிப்பேழையைப் போட்டுப் பார்க்கும் வசதி இல்லாததால், கைது செய்யப்பட்டுள்ள பூமிநாதன் விடுவிக்கப்படாமல், ஒரு வருடத்திற்கும் மேலாக சட்டவிரோத சிறைத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். பொடா, 'தீவிரவாதிகள்' மீது மட்டுமே பாயும் இலட்சணம் இதுதான்!

''நக்கீரன்'' ஆசிரியர் கோபாலை பொடாவின் கீழ் கைது செய்ததே தவறு எனக் குறிப்பிட்டு, சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆள் கொணர்வு மனுவை விசாரித்த நீதிபதிகள், நிபந்தனை பிணையின் கீழ் கோபாலை விடுதலை செய்துள்ளனர். அத்தீர்ப்பில், ''கோபால் முறையாகக் கைது செய்யப்படவில்லை; அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மனித உரிமை மீறலைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது'' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஜார்கண்டு மாநிலத்தில் ''பொடா''வின் கீழ் கைது செய்யப்பட்ட சிறுவன் ஜானகி புய்யா.



சென்னை உயர் நீதிமன்றம் பொடா வழக்கில் பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன், பாவாணன், தாயன்பன் ஆகியோருக்கு வழங்கிய பிணையை, தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் உடனடியாக மனுதாக்கல் செய்து எதிர்த்தது. இந்த மனுவை விசாரித்த உச்சநீதி மன்றம், ''இந்த ஜனநாயக நாட்டில் பழ.நெடுமாறன் ஒரு அரசியல்வாதி; அரசியல் ரீதியாக தனது கருத்தை அவர் தெரிவிக்கக் கூடாதா? இதை ஏன் பெரிதுபடுத்த வேண்டும்? **பீதி ஏற்படும் சூழ்நிலையை உருவாக்காதீர்கள்**'' எனக் குறிப்பிட்டு, அப்பிணையை ரத்து செய்ய மறுத்து விட்டது.

பொடாவை நியாயப்படுத்த ஆளுங்கும்பல் பயங்கரவாத பீதியைக் கிளப்புகின்றன என்பதுதான் உண்மை; இப்படிப்பட்ட நிலையில் இப்பாசிச சட்டத்தை ரத்து செய்வதுதான் நியாயமாக இருக்கும். சொந்த வீட்டுக்காரனையே கடிக்கத் துணிந்துவிடும் நாயை, யாரும் சோறு போட்டு கொஞ்ச மாட்டார்கள். ஆனால், உச்சநீதிமன்றமோ, குடிமக்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் எனச் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் பொடாவை ரத்து செய்யாமல், ''அச்சட்டம் அரசியல் சாசனப்படி செல்லும்'' என அநீதியான தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

பொடா சட்டத்தின் 21-ஆவது பிரிவானது, அரசியல் சாசனம் வழங்கியுள்ள பேச்சுரிமையைப் பறிப்பதாகக் குறிப்பிட்டு, அப்பிரிவை நீக்க வேண்டும் என வை.கோ. வழக்கு தொடுத்திருந்தார்; மக்கள் குடியுரிமைக் கழகம், அனைத்திந்திய மனித உரிமை மற்றும் சமூக நீதி ஆகிய அமைப்புகள் பொடா சட்டத்தை அடியோடு ரத்து செய்யக் கோரி வழக்கு தொடுத்திருந்தன. இவ்வழக்குகளை விசாரித்த உச்சநீதி மன்றம், பொடா சட்டத்தின் அனைத்துப் பிரிவுகளும் அரசியல் சாசனப்படி செல்லும் என அடித்துக் கூறி விட்டது.

பேச்சுரிமை, கூட்டம் போடும் உரிமை ஆகிய அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் பொடா சட்டத்தின்



படிப்பகம்

www.padippakam.com

20,21,22-ஆவது பிரிவுகளுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்துள்ள உச்சநீதி மன்றம், ''தடை செய்யப்பட்டுள்ள அமைப்புகளுக்கு தார்மீக ஆதரவளிப்பது பொடா சட்டப் பிரிவின் கீழ் குற்றமாகாது; அதே நேரம் அந்த ஆதரவின் பின்னணியில் இருக்கும் குற்ற நோக்கத்தை போலீசார்தான் நிரூபிக்க வேண்டும்'' என நயவஞ்சமாகக் குறிப்பிட்டுள்ளது. இதன்படி பார்த்தால், இந்திய மக்கள் பேச்சுரிமையையும், கூட்டம் போடும் உரிமையையும் அரசியல் சாசனத்தின்படி கோர முடியாது. அவர்கள் அதற்கு போலீசு அதிகாரியின் கருணைக்கு மனுப்போட வேண்டும். போலீசு அதிகாரி மனது வைத்தால், பேச்சுரிமை கிடைக்கும்; இல்லையென்றால், பயங்கரவாதி என்ற பட்டப் பெயரோடு சிறைத் தண்டனைதான் கிடைக்கும்.

''தீவிரவாதம் பற்றித் தகவல் தெரிந்தவர்கள் போலீசுக்குத் தெரிவிக்க வேண்டும். பத்திரிகையாளர்களும், வக்கீல்களும் இதற்கு விதி விலக்கு அல்ல'' என உச்சநீதி மன்றம் தீர்ப்பில் உறுதியாகக் கூறிவிட்டது. இதைக் கொஞ்சம் பச்சையாகச் சொன்னால், ''அடுத்த வீட்டுக்காரனை நீங்கள் உளவறிய வேண்டும்; அவன் உங்களை வேவு பார்ப்பான். குடிமக்கள் அனைவரும் போலீசு உளவாளிகளாக இருக்க வேண்டும்'' என்பதுதான்.

''சாட்சிகளின் அடையாளங்களை, தவிர்க்க முடியாத கால கட்டங்களில் இரகசியமாக வைத்துக் கொள்ளவும்'' உச்சநீதிமன்றம் அனுமதித்திருக்கிறது. இதற்கு உரை எழுதினால், ''பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவரைத் தண்டிக்க எத்தனை பொய் சாட்சிகளை வேண்டுமானாலும், போலீசு தயாரித்து கொண்டு வந்து நிறுத்தலாம். அவர்களின் குட்டு அம்பலமாவதை நீதி மன்றமே தடுத்து நிறுத்தும்'' என இருக்கும்.

●●●

**பொ**டா சட்டம் அடிப்படை உரிமைகள் எதனையும் பறிக்கவில்லை என உச்சநீதி மன்றம் சண்டப் பிரசங்கம் செய்த அதே நாளில், ஜனநாயகத்தின் இன்னொரு துணான நாடாளுமன்றத்தில், ''பொடா தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு'' மூன்று சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

தமிழகத்தில் வை.கோ. உத்திரப் பிரதேசத்தில் ராஜா பைய்யா ஆகிய ஏதோ ஒன்றிரண்டு வழக்குகளில் இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டதாக இந்து மதவெறிப் பாசிசக் கும்பல் ஒப்புக் கொண்டு, அதன் பாசிச பேயாட்டத்தைப் பூசி மெழுகப் பார்க்கிறது. புலிக்கு பூனை முகமூடி மாட்டி விடுவதைப் போன்று, மூன்று சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து, இச்சட்டத்திற்கு எதிராக எழுந்து வரும் எதிர்ப்புகளைச் சமாளித்துவிட முயலுகிறது.



சென்னை மத்திய சிறையில் இருந்து பிணையில் வெளியே வரும் நக்கீரன் ஆசிரியர் கோபால். இவர் கைது செய்யப்பட்ட விதமே தவறு எனத் தமிழக அரசின் மண்டையில் குட்டியிருக்கிறது, சென்னை உயர் நீதிமன்றம்.

பொடா சட்டத்தின் 60-ஆவது பிரிவின் கீழ் மைய அரசும், மாநில அரசுகளும் பொடா வழக்குகள் தொடர்பாக மறுபரிசீலனைக் குழுக்களை அமைத்துக் கொள்ள முடியும். இம்மறு பரிசீலனைக் குழுக்கள் ''பொடா''வின் கீழ் ஒரு அமைப்பைத் தடை செய்தது சரியா, தவறா? போலீசு சந்தேகப்படும் நபரின் தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுவது சரியா, தவறா? என்ற இரு அம்சங்களை மட்டும் பரிசீலனை செய்து, ஆலோசனை சொல்ல முடியும். தற்போழுது கொண்டுவரப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள், வெறும் அறிவுரை சொல்லும் கமிட்டியாகச் செயல்பட வேண்டிய இம்மறுபரிசீலனை கமிட்டிகளுக்கு, உத்தரவு போடும் அதிகாரத்தையும், வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் வழங்கியுள்ளதாக மைய அரசு கூறுகிறது.

''பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ஒருவர், பரிசீலனை கமிட்டிகளுக்கு மனு செய்தால், அவர் கைது செய்யப்படுவதற்கு பூர்வாங்க ஆதாரம் இருக்கிறதா என விசாரணை நடத்தவும், அது தொடர்பாக உத்திரவிடவும் அதிகாரம் உண்டு.''

''இரண்டாவதாக, மைய பரிசீலனை கமிட்டி தரும் வழிகாட்டுதல்கள், மைய - மாநில அரசுகளையும்; வழக்கை விசாரிக்கும் போலீசு அதிகாரிகளையும் கட்டுப்படுத்தும்; மாநில மறுபரிசீலனை கமிட்டி தரும் வழிகாட்டுதல்கள் மாநில அரசையும், வழக்கை விசாரிக்கும் போலீசு அதிகாரிகளையும் கட்டுப்படுத்தும்''

''மூன்றாவதாக, ஒரு குறிப்பிட்ட வழக்கில் மைய பரிசீலனைக் குழுவும்; மாநில பரிசீலனைக் குழுவும் எதிரும் புதிருமான வழிகாட்டுதல்களைக் கொடுத்தால், மைய பரிசீலனைக் குழுவின் வழிகாட்டுதல்தான் இறுதியானது'' - இவைதான் தற்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள மூன்று திருத்தங்கள்.

ஏதோ தேவதூத இரட்சகனைப் போலக் காட்டப்படும் இந்த மறுபரிசீலனைக் குழுக்கள் பிறவியிலேயே ஊனமானவை; மோசடித்தனமானவை. மைய அரசோ/மாநில அரசோ ஒருவரை பொடாவின் கீழ் கைது செய்வதை, இக்கமிட்டிகளால் தடுத்து நிறுத்த முடியாது. இப்பரிசீலனை குழுக்களுக்கு மனு செய்யும் ஒரு பொடா கைதியின் வழக்கை, குறிப்பிட்ட நாட்களுக்குள் விசாரித்து உத்திரவிட வேண்டும் என்ற எந்த காலக் கெடுவும் கிடையாது. இதனால், கைது செய்யப்பட்டவரின் வழக்கு பற்றிய ஆவணங்களைத் தராமலோ அல்லது வேறு வழிகளிலோ விசாரணையை இழுத்தடித்து, அக்கைதியைச் சிறையிலேயே அடைத்து வைக்க முடியும்.

மேலும், மாநில மறுபரிசீலனை கமிட்டிகள், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு எதிராக உத்திரவிடும் என்பதை காதில் பூ வைத்தவன் கூட நம்ப மாட்டான். குண்டர் தடுப்புச் சட்டம், தேசிய பாதுகாப்பு சட்டம் முதலானவற்றில் கைது செய்யப்பட்டவர்களின் வழக்குகளை விசாரிக்கும் மறுபரிசீலனை கமிட்டிகள், மாநில


படிப்பகம்

www.padippakam.com

அரசுகளுக்கு ஜால்ரா தட்டுவதைப் போலதான் இந்த கமிட்டிகளும் செயல்படும்.

இந்த ஓட்டைகள் ஒருபுறமிருக்க, பொடா சட்டத்தில் திருத்தங்களே கொண்டு வரக் கூடாது என வாதாடிய ஜெயா, விசாரணையைக் கூடத் தொடங்க விடாமல் மைய மறுபரிசீலனை கமிட்டியை, முடக்கியே போட்டு விட்டார்.

''பொடா சட்டத்தின் 60-ஆவது பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இக்கமிட்டிகளுக்கு உத்தரவிடும் அதிகாரம் கிடையாது; நீதிமன்றங்களில் விசாரணை தொடங்கிய பின், அந்த வழக்குகளை மறுபரிசீலனை கமிட்டிகள் விசாரிக்க முடியாது; மறுபரிசீலனை கமிட்டிகள் நீதிமன்ற அதிகாரத்தில் குறுக்கிடுகின்றன'' எனப் பல வாறாக ஆட்சேபணைகளை எழுப்பி, இக்கமிட்டிகளின் கையாலாகாத் தனத்தை அம்பலப்படுத்திவிட்டார், ஜெயா.

வை.கோ. மற்றும் ம.தி.மு.க. நிர்வாகிகள் தொடர்பான வழக்கு விவரங்களைத் தரும்படி, தமிழக அரசுக்கு கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதியே சோர்ந்து போய்விட்டது, மைய மறுபரிசீலனைக் கமிட்டி. ஜெயாவை வழிக்குக் கொண்டுவர முடியாத அக்கமிட்டி, ''தனது அதிகார எல்லை என்ன?'' என்ற கேள்வியை மைய அரசிடம் எழுப்பிவிட்டு, ஆவணங்களைக் கூடப் பெற முடியாமல் முடங்கிக் கிடக்கிறது. பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ஒருவர், மைய அரசு, மாநில அரசு, மறு பரிசீலனை கமிட்டிகள் - இம்மூன்றுக்கும் இடையே பகடைக்காயாக உருட்டப்படுவதற்குதான் இச்சட்டத் திருத்தங்கள் பயன்படும்.

●●●

**தீ**விரவாதம் பற்றிக் கவலைப் படும் காங்கிரசு, போலி கம்யூனிஸ்டுகள் போன்ற எதிர்க்கட்சிகள் கூட, பொடாவை ரத்து செய்ய வேண்டும் எனக் கூறி வருகின்றன. பொடாவைப் பற்றி வாதம் நடக்கும் போதெல்லாம், இக்கட்சிகள் அச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகக் குற்றம் சாட்டுகின்றன. இக்கட்சிகள் குறைபட்டுக் கொள்வது போல் இல்லாமல், அச்சட்டம் தீவிரவாதிகளை மட்டுமே குறி வைத்துப் பிடிக்கும்படி சரியாகப் பயன்படுத்தப்பட்டால், பொடாவை ஆதரிக்க முடியுமா? என்ற கேள்வி இங்கு எழுந்து விடுகிறது.



ஜெயாவால் முடக்கப்பட்ட மைய மறுபரிசீலனை கமிட்டியின் தலைவர் ஆ.பி. சஹாரியாவிடம் (இடது ஓரம்) மனு கொடுக்கும் தி.மு.க., ம.தி.மு.க.வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

பொடா சட்டத்தில் தீவிரவாதம் பற்றிக் குறிப்பான வரையறை எதுவும் கிடையாது. பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்துப் போராடுபவர்களைக் கூட, பொடா சட்டத்தின் கீழ் பயங்கரவாதிகளாகக் குற்றஞ் சுமத்திக் கைது செய்ய முடியும். இதன்படி பார்த்தால், மான்சாண்டோ போன்ற பன்னாட்டு விதை நிறுவனங்களை எதிர்த்துப் போராடும் பருத்தி விவசாயிகள்; பன்னாட்டு நிறுவனங்களின் நுகர்பொருட்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கக் கோரும் உள்ளூர் வியாபாரிகள்; தாராள இறக்குமதியை எதிர்க்கும் சிறிய தொழில் அதிபர்கள்; தனியார்மயத்தை எதிர்க்கும் பொதுத்துறை ஊழியர்கள், தொழிலாளர்கள் - இவர்கள் அனைவருமே பயங்கரவாதிகள்தான்.

தனியார்மயம் - தாராளமயத்திற்கும் அதனின் அடியாளான இந்து மதவெறி பாசிசத்திற்கும் எதிராக எழுந்து வரும் எதிர்ப்புகள் அனைத்தையும் அடக்கி ஒடுக்குவதுதான் பொடா சட்டத்தின் நோக்கம்! இதற்காகவே இந்திய அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ள அரைகுறையான ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் பறித்துவிடும்படி இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தை நியாயப்படுத்துவதற்காகவே, தீவிரவாதம் - தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து எனப் பீதியூட்டப்படுகிறது. இந்த உண்மைகளை எடுத்துக் கூறி பொடாவை ரத்து செய்யக் கோராமல், பொடா தவறாகப் பயன்படுத்துவதாக முதலைக் கண்ணீர் வடிப்பது, அரசியல் அற்ற வாதமாகும்; பொடாவின் ஜனநாயக விரோத பாசிசத் தன்மையைப் பூசி மெழுகுவதாகும்.

பொடாவை ரத்து செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தில் வெற்றுக் கூச்சல் போட்ட காங்கிரசுதான், அக்கட்சி ஆட்சியில் உள்ள மகாராஷ்டிராவிலும், ஜம்மு-காஷ்மீரிலும் முசுலீம்களுக்கு எதிராக பொடாவைப் பயன்படுத்தி வருகிறது.

பொடாவை எதிர்க்கும் 'மார்க்சிஸ்டு'களோ, அவர்கள் ஆளும் மேற்கு வங்கத்தில் பொடாவுக்கு இணையான ''பொகா'' என்ற சட்டத்தை உருவாக்க முயன்றனர். அதற்குக் கூட்டணி கட்சிகளிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியதால், தற்காலிகமாக ''பொகா''வைக் கிடப்பில் போட்டு வைத்துள்ளனர்.

தி.மு.க.வும், ம.தி.மு.க.வும், பகுஜன் சமாஜ் கட்சியும் தங்களின் பிழைப்புவாத, சுயநல அரசியல் காரணமாகவே முன்பு பொடாவை ஆதரித்தன; இப்பொழுது பொடா எதிர்ப்பு வேடம் போட்டு கொண்டுள்ளன.

பொடாவை வீழ்த்துவதற்கு, அச்சட்டத்தை ஆதரிப்பவர்களை மட்டுமின்றி, பொடாவை எதிர்ப்பதில் எதிர்க்கட்சிகளிடம் உள்ள இந்த சந்தர்ப்பவாதத்தையும், இரட்டை வேடத்தையும் கூட உழைக்கும் மக்கள் எதிர்த்துப் போராட வேண்டும். இப்போராட்டம் இன்றி, பொடாவை வீழ்த்த எதிர்க்கட்சிகளை மட்டுமே முழுதாக நம்புவது, நமது முதுகில் நாமே குத்திக் கொள்வது போன்றாக முடிந்துவிடும். இதை வீண் வறட்டு வாதம் என்பவர்கள், ''தடா''வின் இடத்தை ''பொடா'' பிடித்த வரலாற்றைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள்!

● செல்வம்


படிப்பகம்

# சர்வாதிகாரி சதாமுக்கு ஒரு நீதி; போர் வெறியன் புஷ்ஷுக்கு ஒரு நீதியா?

அமெரிக்க இராணுவம், ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் உசேனைத் தேடிக் கண்டுபிடித்துக் கைது செய்திருப்பதை, புலி வேட்டைக்குப் போனவன் எலியைப் பிடித்துவந்த கதையோடுதான் ஒப்பிட முடியும். சதாம் உசேன் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறப்பட்ட பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் 'தேடிக் கண்டுபிடிப்பதற்காக' ஈராக்கினுள் புகுந்துள்ள அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள், அதைக் கண்டுபிடிக்க முடியாமல், சதாம் உசேனைக் கைது செய்ததையே வெற்றிகரமான வேட்டையாகக் கொண்டாடுவதை வேறெப்படிக் கூற முடியும்?

அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்புப் போரில் தோற்றுப் போன சதாம் உசேன், கடந்த ஏழு மாதங்களாக, அவரது சொந்த ஊரான திக்ரித் பகுதியில்தான் தலைமறைவாக இருந்து வந்திருக்கிறார். சதாமுக்கு அடைக்கலம் கொடுத்த அவரது உறவினர்களில் ஒருவன் ஆள் காட்டியாக மாறி, சதாம் பதுங்கியிருந்த இடத்தை அமெரிக்க உளவுத் துறைக்குக் காட்டிக் கொடுத்ததாகவும்; அமெரிக்க இராணுவத்தால் சதாம் உசேன், அவர் பதுங்கியிருந்த நிலவறையில் கைது செய்யப்பட்ட பொழுது, அவர் எந்தவிதமான எதிர்ப்பும் காட்டாமல் சரண் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்க உளவுத்துறைதான் சதாமை தேடிக் கண்டுபிடித்ததாகக் கூறப்படுவதை மறுக்கும் செய்தியும் உண்டு. சதாமால் அடக்கி ஒடுக்கப்பட்ட குர்து இனத்தைச் சேர்ந்த குர்திஷ் தேசபக்த முன்னணி எனும் அமைப்பு ''நாங்கள்தான் சதாமின் மறைவிடத்தைத் தேடிக் கண்டுபிடித்தோம்; சதாமுக்கு மயக்க மருந்து கொடுத்து முடக்கிவிட்டு, அமெரிக்க உளவுத்துறைக்குத் தகவல் கொடுத்தோம்; அதன் பின்னர்தான் அமெரிக்க இராணுவம் அவரைக் கைது செய்தது'' எனப் பத்திரிகைகளுக்கு செய்தி அனுப்பியிருக்கிறது.

சதாமைத் தேடிக் கண்டுபிடித்தது யாராக இருந்தாலும், அதன் பலனை முழுமையாக அறுவடை செய்வது அமெரிக்காதான். அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈராக் மக்கள் நடத்தும் கொரில்லா தாக்குதல்களினால் பீதியும், கலவரமும், விரக்தியும் அடைந்துவிட்ட அமெரிக்க இராணுவச் சிப்பாய்களுக்கு, சதாமின் கைதைக் காட்டி மீண்டும் உருவேற்றப்படுகிறது. இன்னொருபுறம், உள்நாட்டில் சரிந்து விழுந்துவிட்ட அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷின் செல்வாக்கை, சதாமின் கைதைக் காட்டி தூக்கி நிறுத்த அமெரிக்க அரசு படாதபாடு படுகிறது.

சதாம் கைது செய்யப்பட்டிருப்பதையும்; போர்க் குற்றங்களுக்காக அவர் விசாரிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டிருப்பதையும் அமெரிக்க அடிவருடிகளும், பிற ஏகாதிபத்திய நாடுகளும்தான் கைதட்டி வரவேற்றுள்ளன. சதாமின் ஆட்சியின் பொழுது, அரசு பயங்கரவாதத்தால் அடக்கி ஒடுக்கப்பட்ட ஷியா பிரிவு முசுலீம்கள் கூட, அமெரிக்கா எதிர்பார்த்ததைப் போல, சதாம் கைது செய்யப்பட்டதைத் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடவில்லை.

கைது செய்யப்பட்ட சதாமை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நடத்திய விதமும்; பரிசோதனை என்ற பெயரில் சதாமின் உடம்பில் பேன் இருக்கிறதா, அவரின் பல் சொத்தையாக இருக்கிறதா என சதாம் அவமானப்படுத்தப்பட்டதை, விளம்பரப் படம் போல தொலைக்காட்சிகளில் திரும்ப திரும்ப ஒளிபரப்பியதும் அமெரிக்காவின் மேலாதிக்கத் திமிருக்கு எதிரான கோபத்தைத்தான் ஈராக்கிய மக்களிடம் கிளறி விட்டுள்ளது. அமெரிக்காவை எதிர்த்த சதாம் ஒரு கோழை எனக் காட்டுவதற்காகவே, சதாமை அமெரிக்கா அவமானப்படுத்தியது என ஈராக்கில் மட்டுமின்றி, பிற வளைகுடா நாடுகளிலும் அமெரிக்காவின் மேலாதிக்க திமிரை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

சதாமின் ஆட்சியின் பொழுது, போலீசாரின் சித்திரவதைக்குள்ளான ஹஷிம் என்ற ஷியா முசுலீம் டாக்ஸி ஓட்டுநர், ''அயோத்துல்லா அலி சிஸ்டானி (ஷியா முசுலீம்களின் தலைவர்) சொன்னால், அமெரிக்கர்களை ஒரு கை பார்ப்பேன்'' என ஆக்கிரமிப்புக்கு எதிரான வெறுப்பை உமிழ்கிறார்.

அப்துல் என்ற தேநீர் வியாபாரி, ''நான் சதாமை எதிர்ப்பவன் தான்; ஆனாலும், யூத அமெரிக்கர்கள், சதாமைக் கைது செய்த விதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது'' என்கிறார்.

உமர் கனிம் என்ற இளைஞர், ''சதாம் பிடிபட்டிருக்கக் கூடாது; அவர் தியாகியாகி இருக்க வேண்டும். அவர் உயிருடன் பிடிபட்டது எங்களுக்கு நேர்ந்த சாபக்கேடு'' என சதாமின் மீது கோபப்படுகிறார்.

அகமது ஹில்லல், ''ஆக்கிரமிப்பாளர்களை சதாம் கொலை செய்திருக்க வேண்டும்; அல்லது தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும்'' என ஆத்திரப்படுகிறார்.

இவை ஏதோ ஒன்றிரண்டு பேரின் மனக்குமுறல்கள் அல்ல. சதாம் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஃபிலுஜா, ரமடி, மசூல் ஆகிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. ரமடி நகரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அமெரிக்க இராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டில் மூன்று பேர் கொல்லப்பட்டதோடு, பலர் படு

சதாம் கைது செய்யப்பட்ட பொழுது... வரலாற்றில் எல்லா சர்வாதிகாரிகளின் வாழ்வும் இப்படி பரிதாபகரமாகத்தான் முடிகிறது.



www.padippakam.com

காயமடைந்துள்ளனர். டைக்ரீஸ் நதிக்க ரையில் அமைந்துள்ள மசூல் நகரை, ஈராக்கின் பிற பகுதிகளோடு இணைக்கும் பாலங்களை மூடி முற்று கையிட்டு, ஆர்ப்பாட்டங்களை அடக்கியிருக்கிறது, அமெரிக்க இராணுவம்.

***


குர்து இனத்தைச் சேர்ந்த அமைப்புகளும், ஷியா முசுலீம்களில் ஒரு பிரிவினரும் சதாம் கைது செய்யப்பட்டுள்ளதை வரவேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தியிருந்தாலும், இதனை அமெரிக்காவிற்கு ஆதரவாக எடுத்துக் கொள்ள முடியாது. சதாமின் கைது, அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈராக் மக்கள் நடத்திவரும் போராட்டம் பற்றிய இரண்டு உண்மைகளை, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் புரிய வைத்திருக்கிறது.

அமெரிக்க இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்கள் பாத் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலரால் நடத்தப்படுவதாகவும், சதாம் அதற்குத் தலைமை தாங்குவதாகவும் அமெரிக்கா கூறிக் கொண்டிருந்தது. சதாமைக் கைது செய்துவிட்டால், இந்தத் தாக்குதல்கள் நலிந்துவிடும் என்று கூட அமெரிக்கா கனா கண்டு வந்தது.

ஆனால், சதாம் கைது செய்யப்பட்டதற்குப் பிறகு கொரில்லா தாக்குதல்கள் தீவிரமாகி இருக்கிறதேயொழிய, குறையவில்லை. சதாம் கைது செய்யப்பட்ட பொழுது, அவர் பதுங்கியிருந்த நிலவறையில், ''தொலைபேசி இல்லை; ஈராக் நாட்டு வரைபடம் இல்லை'' என அமெரிக்க இராணுவ அதிகாரிகளே குறிப்பிட்டுள்ளனர். ''சதாம் கைது செய்யப்பட்ட பொழுது, அவர் இருந்த நிலையை வைத்துப் பார்க்கும் பொழுது, ஈராக் மக்கள் அமெரிக்காவுக்கு எதிராக நடத்தி வரும் போராட்டங்களில் அவருக்கு பெரிய பங்கிருப்பதாகத் தெரியவில்லை'' என அமெரிக்க இராணுவ மேஜர் ஜெனரல் ரே ஒடியேர்னோ இப்பொழுது வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

இரண்டாவதாக, ''தலைமறைவாக இருக்கும் சதாம் உசேன் மீண்டும் அதிபராகிவிடலாம் எனப் பயந்து கொண்டிருந்த ஷியா முசுலீம்கள், சதாம் கைது செய்யப்பட்ட பிறகு முழுமையாக அமெரிக்காவை ஆதரிப்பார்கள்'' என நம்பிக் கொண்டிருந்த அமெரிக்காவின் நப்பாசையிலும் மண்விழுந்துவிட்டது.

2004 ஜூன் மத்தியில், ஈராக்கின் நகர சபைகளைக் கூட்டி, அதில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, அந்த உறுப்பினர்களைக் கொண்டு இடைக் கால அரசாங்கத்தை அமைத்து, அரசியல் சாசனத்தை வகுக்கலாம் என்பது அமெரிக்காவின் திட்டம். இந்தத் திட்டத்தை, ஈராக் நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக உள்ள ஷியா முசுலீம்களின் உயர் மத குரு அயோத்துல்லா அலி ஹுசைனி அல் சிஸ்டானி ஏற்க மறுத்துவிட்டார். ''ஒரு குடிமகனுக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் நேரடித் தேர்தலை நடத்தி அமைக்கப்படும் அரசாங்கம்தான் அரசியல் சாசனத்தை வகுக்க வேண்டும்'' என அவர் கோரிவருகிறார்.




மேலும், சதாம் கைதுக்குப் பிறகு, ஷியா முசுலீம்கள் அமெரிக்காவை ஆதரிப்பதற்கு பதிலாக ஷியா-சன்னி பிரிவு முசுலீம்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்திப் போராட வேண்டும் என்ற முயற்சிகள்தான் மேற்கொள்ளப்படுகின்றன. ஷியா முசுலீம்கள் அதிகமாக வாழும் சதர் மாவட்டம் முழுவதிலும், ''சன்னிகளும், ஷியாக்களும் யூப்ரடீஸ், டைக்ரீஸ் (ஈராக் நாட்டில் பாயும் இரண்டு நதிகள்) நதிகளைப் போன்றவர்கள்'' என எழுதப்பட்ட பதாகைகள் கட்டப்பட்டிருப்பது, அமெரிக்காவின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு எதிரான பிரகடனமாகப் பார்க்கப்படுகிறது.

***

புதை சேற்றுக்குள் சிக்கிக் கொண்டுவிட்ட அமெரிக்காவுக்கு சதாமின் கைது எந்த விதத்திலும் கை கொடுக்கவில்லை. ''சதாம் உசேன் மறைத்து வைத்துள்ள பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைக் கண்டுபிடித்து அழிக்காவிட்டால், உலகின் அமைதி கெட்டு விடும்'' எனக் கூறி இராக் மீது படையெடுத்த அமெரிக்கா, கடந்த ஏழு மாதங்களாக அதில் ஒரு துரும்பைக் கூடக் கண்டுபிடிக்கவில்லை இதனால் அம்பலப்பட்டுப் போன புளுகன் புஷ், சதாம்தான் அமெரிக்கா தேடிய பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதம் என்பது போல, ''சதாம் போர்க் குற்றவாளி; அவரை விசாரித்து தண்டிக்க வேண்டும்; சதாம் இல்லாத உலகம் இனி அமைதியாக இருக்கும்'' எனக் கூறி, அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துகிறார்.

இந்த உப்பு சப்பில்லாத காரணத்தை ஏற்க உலக மக்கள் தயாராக இல்லை. ''மூன்று இலட்சம் ஈராக்கியர்களைக் கொன்ற சதாம் போர்க்குற்றவாளி என்றால், பொருளாதாரத் தடையுத்தரவு மூலம் ஐந்து இலட்சம் ஈராக்கிய குழந்தைகளையும்; ஆக்கிரமிப்புப் படையெடுப்பால் பல ஆயிரம் ஈராக்கியர்களையும் கொன்ற அமெரிக்க அதிபர்களும் போர்க் குற்றவாளிகள் தான்'' என ஜார்ஜ் புஷ்ஷின் முகத்தில் செருப்பால் அறைந்தது போல உலகெங்கிலும் இருந்து கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

எப்படிப்பட்ட குற்றவாளியாக இருந்தாலும், அவர் மீது நடத்தப்படும் விசாரணை நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெற வேண்டும்; இட்லரின் கூட்டாளிகளான நாஜி குற்றவாளிகளுக்குக் கூட இந்த உரிமை


படிப்பகம்

மறுக்கப்படவில்லை. ஆனால், அதிபர் ஜார்ஜ் புஷ்ஷோ, ''சதாமுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும்'' என தீர்ப்பை எழுதி வைத்துக் கொண்டு, விசாரணையை நடத்தப் பார்க்கிறார். இதனால் ''ஈராக்கில் அமெரிக்காவால் உருவாக்கப்படும் நீதிமன்றம் சதாமை விசாரிக்கக் கூடாது; சர்வதேச நீதிமன்றம்தான் விசாரிக்க வேண்டும்'' என்றும் அமெரிக்காவின் விசாரணை நாடகத்துக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. சதாமை சர்வதேச நீதிமன்றம் விசாரித்தால், சதாமின் போர்க் குற்றங்களுக்கு, பிரிட்டனும், அமெரிக்காவும் கூட்டாளிகளாக இருந்தது மீண்டும் அம்பலமாகி விடும் என்பதாலேயே, அதற்கு அமெரிக்கா சம்மதிக்க மறுக்கிறது.

ஈராக்கை மறுசீரமைப்பதற்காக பல இலட்சம் கோடி ரூபாய் பெறுமான ஒப்பந்தங்கள், அமெரிக்காவால், அமெரிக்க நிறுவனங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளன. ஈராக் பிரச்சினையில் அமெரிக்காவுக்குத் தலையாட்ட மறுக்கும் எந்தவொரு நாடும், இந்தப் பணிகளில் துணை ஒப்பந்தங்களைக் கூடப் பெற முடியாது. இதில் அமெரிக்காவோடு சேர்ந்து கூட்டுக் கொள்ளையடிக்க வேண்டும் என்பதற்காகவே, ஈராக் மீதான போரை எதிர்த்த பிரான்சும், ஜெர்மனியும், ரசியாவும் சதாமைக் கைது செய்ததற்குப் பாராட்டு தெரிவித்து, புஷ்ஷுக்கு ''ஐஸ்'' வைக்கின்றன. இந்தியாவிலுள்ள ''சோ'' போன்ற அமெரிக்க அடிவருடிகள் ''ஈராக் விசயத்தில் நீக்குப் போக்காக நடந்து கொள்ளுமாறு'' வாஜ்பாயி அரசுக்கு ஆலோசனை சொல்கிறார்கள். ஏகாதிபத்தியங்கள் சதையைப் பங்கு போட்டுக் கொண்ட பிறகு, இந்திய தரகு முதலாளிகளுக்கு எலும்புத் துண்டாவது கிடைக்குமே என்ற நப்பாசைதான் இதற்குக் காரணம்.

இந்தப் புதிய கூட்டாளிகளின் ஒத்துழைப்போடு, ''சதாமைத் தூக்கில் போட்டுவிட்டு, ஈராக்கில் ஒரு பொம்மையாட்சியை அமைத்து விட்டு, பெரும்பாலான அமெரிக்க சிப்பாய்களைத் திரும்ப அழைத்துக் கொண்டு, அமெரிக்கா தலைமையில் ஒரு சர்வதேசப் படையை ஈராக்கில் நிறுத்திவிட்டு'' ஈராக்கில் இருந்து அமெரிக்கா வெளியேறத் திட்டம் போடலாம். கடப்பாரையை முழுங்கியவன் சுக்குக் கசாயத்தைக் குடித்த கதையாகத்தான், அமெரிக்காவின் திட்டம் முடியும்!

● ரஹீம்

## சி.ஐ.டி.யு.வின் அனைத்திந்திய மாநாடு:

# மேடையில் சவால் கொள்கையில் திவால்

இந்திய தொழிற்சங்க மையத்தின் (சி.ஐ.டி.யு) 11-வது அகில இந்திய மாநாடு, சென்னை மாதவரத்தில் கடந்த மாதம் ஐந்து நாட்கள் நடந்தது.

மாநாடு வெற்றி பெற ஏ.ஐ.டி.யு.சி., எச்.எம்.எஸ்., உலக தொழிற்சங்க சம்மேளனம், யு.சி.யு.சி., ஆர்.எஸ்.எஸ்-இன் தொழிற்சங்கப்பிரிவான பி.எம்.எஸ் ஆகிய தொழிற்சங்கங்கள் வாழ்த்துக்கள் தெரிவித்தன.

மாநாட்டில் பல அரசியல் தீர்மானங்களும் அடுத்த 3 ஆண்டு காலத்திற்கு வேலைதிட்டமும் வகுக்கப்பட்டன.

வேலை நிறுத்த உரிமை குறித்து உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்துகளுக்கு எதிராக, வேலை நிறுத்த உரிமையை நிலைநாட்டுவதற்காக, தேசிய அளவில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உலகமயமாக்கல் கொள்கையின் சவால்களைச் சந்திப்பதற்கு ஒரு ஆற்றல்மிகு அமைப்பைக் கட்டுவது, தேசிய வெகுஜன மேடை (என்.பி.எம்.) அமைப்பையும் தொழிற்சங்கங்களின் கூட்டுப் போராட்டக் குழுவையும் வலுப்படுத்துவது, நாட்டின் உழைக்கும் வர்க்கத்தினரை ஒன்றுபடுத்துவதற்கும் மூலதனத்தின் உலகளாவிய தாக்குதலை எதிர்கொள்வதற்கு சி.ஐ.டி.யு-வை வலுவானதொரு அமைப்பாக உருவாக்குவது; இவைதான் அடுத்த 3 ஆண்டு காலத்திற்கு முக்கிய வேலை திட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தாராளவாத அறிவுஜீவிகள் நாணயமாக அங்கலாய்த்துக் கொள்வதற்குமேல், மாநாட்டுத் தீர்மானத்திலும் பேச்சிலும் பாட்டாளி வர்க்க நலன் ஏதும் இல்லை; இவர்களுடைய தீர்மானங்களிலும் வேலைத்திட்டத்திலும் ஆளும் வர்க்கம் தட்டிப்பறித்த பாட்டாளி வர்க்கத்தின் உரிமைகளைப் பறித்தெடுப்பதற்கான, குறிப்பான புதிய போர் தந்திரங்களோ, புதிய மாற்று அமைப்பு வடிவங்களோ, மாற்று திசைவழியோ ஏதும் முன்மொழியவும் இல்லை, முடிவு எடுக்கவும் இல்லை. ஆனால், வெற்று ஏகாதிபத்திய எதிர்ப்புத் தீர்மானங்களுக்கு மட்டும் பஞ்சமில்லை!

'அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக!' என்று முழங்கிக் கொண்டே ஆரம்பம் முதலே சி.ஐ.டி.யு.வை சந்தர்ப்பவாத, பிழைப்புவாத, பாராளுமன்ற சட்டவாத நடவடிக்கைகளுக்கு ஒத்திசை

மாநாட்டில் ஒலித்த நாதஸ்வர மங்கள இசை: சி.ஐ.டி.யு. நடத்தியது தொழிலாளர் மாநாடா? இல்லை, டிசம்பர் மாத கச்சேரியா?



www.padippakam.com

வான ஒரு தொழிற் சங்கமாகத்தான் கவனமாக நிர்வகித்து வருகிறார்கள். கடந்த 33 ஆண்டு கால சி.ஐ.டி.யு.யின் நடவடிக்கைகளை அதன் போராட்ட வரலாற்றைப் பார்ப்பவர்களுக்கு இவ்வுண்மை புரியும்.

''ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்திற்கு எதிராக'' ஒரு துரும்பையும் தூக்கிப் போடாமல், அதன் அரசியல், பொருளாதார, கலாச்சார, சமூகக் கட்டமைப்பில் ஒரு அங்கமாக இயங்கிக் கொண்டு, அவற்றில் சில உதிரி சலுகைகளைக் கோருவதையே பெரும் போராட்டமாகச் சித்தரிக்கிறார்கள்.

ஆனால், ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக மிகப்பெரும் போராட்டங்கள் நடத்தப் போவதாக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை, பில்லி - சூன்யம் எடுக்கும் மாந்திரீக சடங்கு போல் சிவப்பு மையில் எழுதி மாநாட்டு திடலிலேயே புதைத்து விடுகிறார்கள். ஆண்டுக்கு 40 நாட்கள் சுத்தமாக இருந்து ஐயப்பனுக்கு மாலை போட்டு மகர ஜோதியைத் தரிசிக்கும் பக்தன் போல, மாநாட்டை நடத்தும் போது மட்டும் ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு கோஷங்களை எட்டு கட்டையில் முழங்குகிறது, சி.ஐ.டி.யு.

ஆனால், நடைமுறை என்று வரும் போது உள்ளூர் வார்டு உறுப்பினர் முதல் மாநில மந்திரிவரை ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ அடிவருடிகளின் காலை நக்கித்தான் தேவையானப் பதவியைப் பிடிக்கிறார்கள். இதற்காக, பிழைப்புவாத, பொறுக்கி அரசியல் கிரிமினல்களை ஜனநாயக, மதச் சார்பற்ற சக்திகளாக ஒளிவட்டம் போட்டு மக்களிடம் விற்கிறார்கள். சென்ற தேர்தலில் ஜெயலலிதாவை ஆதரித்தபோது, சுத்தி - அரிவாள் சின்னத்தை புரட்சி தலைவி ஆசி பெற்ற சின்னம் என்று மக்களிடம் தள்ளுபடி விலையில் விற்றவர்கள் இப்போது, ஜெயலலிதாவை மாபெரும் ஜனநாயக விரோதி என்கிறார்கள். ஓட்டுப் பொறுக்க உருவாக்கிய இந்த சந்தர்ப்பவாத அரசியல் அமைப்பு ஒட்டைச் சட்டியில்தான் ஏகாதிபத்திய எதிர்ப்பு கொழுக்கட்டையை வேக வைக்க போகிறார்கள்!

இதற்காக, ''வலுவுள்ள'', ''பலமான'' ''ஆற்றல் மிக்க'' அமைப்பாக சி.ஐ.டி.யு.வையும் ''வீரிய மிக்க'' இயக்கங்களையும் கட்டியெழுப்பப் போகிறார்களாம். போராடும் தொழிலாளர்களைக் கொடிய அடக்குமுறையில் சிதறடிக்கும் ஆலை நிர்வாகம், அரசு எந்திரத்துக்கு எதிராகத் தொழிலாளர் தற்காப்பு குழுக்கள், இரகசிய அமைப்புகள் கட்டியமைப்பதை எதிர்க்கும் இந்த அட்டைக் கத்தி வீரர்கள்தான், காற்றில் கத்தி வீசும் ''ஆற்றல்




ஜெயலலிதா உழைக்கும் மக்களின் உரிமையைப் பறிப்பதை, பட்டை நாமம் போட்டு 'அம்பலப்படுத்துகிறது' சி.ஐ.டி.யு.: நாமம் போட்டுக் கொள்வதுதான் போர்க்குணமா?

## ரவுடிகளின் தயவில் சி.ஐ.டி.யு.

**சி.**ஐ.டி.யு.வின் 11-வது அகில இந்திய மாநாட்டில் அதன் தலைமையின் போலித்தனத்தை அம்பலப்படுத்தி புரட்சிகர அமைப்புகளால் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் கலை இலக்கியக் கழகம், மற்றும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி சார்பாக, ''வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களே, சி.ஐ.டி.யு.வை விட்டு வெளியேறுங்கள்!'' என்ற தலைப்பில் பிரசுரங்கள், தட்டிகள், சுவரொட்டிகள் தயாரித்து, சென்னை மற்றும் புறநகர் முழுவதும் பிரச்சார இயக்கம் கொண்டு செல்லப்பட்டது; சி.ஐ.டி.யு செயல்படும் மின் துறை, போக்குவரத்து துறை, வங்கிகள், அரசு அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகிய இடங்களில் மாநாட்டிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே வீச்சாக சி.ஐ.டி.யு.வின் போலித்தனம் அம்பலப்படுத்தப்பட்டது.

மாநாட்டு திடலில், பிரசுரம் விநியோகித்தபோது மாநாட்டு பொறுப்பாளர்கள் போலீசுக்கு நமது தோழர்களைக் காட்டிக் கொடுத்தனர். அதனடிப்படையில், மாநாட்டுப் பேரணி நடந்த மதுரவாயல் போலீசு, தோழர்கள் ரமேஷ், முத்து மற்றும் மணி ஆகியோரைக் கைது செய்தது. உளவுத் துறைகளான, ஐ.பி, ஐ.டி, சி.பி.சி.ஐ.டி, ஐ.எஸ், கியூ பிரிவு மற்றும் மேற்கு வங்க இசட் பிரிவு போலீசும் தோழர்களைப் பற்றி இரவு முழுக்க போலீசு நிலையத்தை தொடர்பு கொண்டு விசாரித்தது. பிறகு மறுநாள் காலை, அமைப்பு பொறுப்பாளர் முன்னிலையில் எந்த வழக்குமின்றித் தோழர்களை விடுவித்தது, போலீசு.

சென்னை பொன்னேரி பகுதியிலிருந்து டாடா 'சுமோ' வண்டியில் மாநாட்டுக்கு வந்தவர்கள் பிரசுரம் விநியோகித்த தோழர் சோமுவை வண்டியினுள் முரட்டுத்தனமாக இழுத்து கண்மூடித்தனமாகத் தாக்கினர். 2 கிலோ மீட்டர் தள்ளி, இருட்டான பகுதியில் தள்ளிவிட்டுச் சென்றனர். சித்தாந்த பலத்தில் அல்ல, பிழைப்புவாத தொழிற்சங்கங்களைப் போன்று சி.ஐ.டி.யு.வும் ரௌடிகளின் தயவில்தான் இயங்குகிறது என்பது இதன் மூலம் வெளிப்பட்டது.

— பு.ஜ.தொ.மு. மற்றும் ம.க.இ.க.,
சென்னை.

www.padippakam.com

மிக்க'' கலையைக் கற்றுத் தரப் போகி றார்கள்.

உரிமைப் பறிப்புக்கு எதிராக இதுநாள் வரையில் கோவணப் போராட்டம், ஆலை மூடலுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம், கூலி - போனசு மறுப்புக்கு எதிராக பட்டை நாமம் போராட்டம், ரேஷன்கடை - பொது விநியோகச் சீர்குலைவுக்கு எதிராகத் தட்டேந்தும் போராட்டம், சீருடை மறுப்புக்கு எதிராக அரைநிர்வாணப் போராட்டம், கறுப்புச் சட்டங்களுக்கு எதிராக வாயில் கறுப்பு துணி கட்டும் போராட்டம், போலீசு அடக்குமுறைக்கு எதிராக மனித சங்கிலி போராட்டம் - இன்னும் பலவித கோணங்கிதனங்களை - சகதி சாலைகளில் நாற்று நடும் போராட்டம், மொட்டை போடும் போராட்டம், இழவு - ஒப்பாரி போராட்டம் என்று வெறும் 'அக்கபோர்'களை ''போர்'' என்று ஆளுயரத்திற்கு சுவரொட்டி ஒட்டி ஆளும் வர்க்கத்திற்கு சிரிப்பு மூட்டியவர்கள்; சேஷ்டைகளையே போராட்டம் என்று சொல்லி ஆளும் வர்க்கத்தை விலாநோகச் சிரிக்க வைத்தவர்கள் இவர்கள். தன்னையே சாட்டையில் அடித்துக் கொண்டு பிச்சைக் கேட்கும் கழைக் கூத்தாடி போல தொழிலாளர்களை ஆளும் வர்க்கத்திடமும் அரசு எந்திரத்திடமும் தன்னை வருத்திக் கொண்டு பிச்சையெடுக்க வைத்தவர்கள் இவர்கள். இப்போது, இன்னும் இப்போராட்டங்களை ''வீரியமிக்க''தாக்கி தொழிலாளர்களை மேலும் ரத்தம் கக்க வைக்காமல் விடப்போவதில்லை என்று சபதம் எடுக்கிறார்கள்.



சட்டமன்ற பதவிக்காக அ.தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்ந்த பொழுது ''தேவதையாக''க் காட்சியளித்த ஜெயா, இப்பொழுது அரக்கியாகி விட்டார்: சி.ஐ.டி.யு. மாநாட்டில் அக்னி கலைக்குழு நடத்திய ''அரக்கியின் தர்பார்'' நாடகம்.

மறுபுறம், பாராளுமன்றம், சட்டமன்றம் இவற்றுக்குள் ஓட்டுப் பொறுக்கிகள் கட்டவிழ்த்து விடும் நாற்காலி பறக்கவிடும் போராட்டம், 'மைக்' வீசும் போராட்டம், சட்டை கிழிப்பு - வேட்டி அவிழ்ப்பு போராட்டம், அருவெறுப்பு சைகை காட்டும் போராட்டம் என்று இவற்றை எல்லாம் சகித்துக் கொண்டு பாராளுமன்றத்தை புரட்சிக்கு திருப்ப காத்திருக்கும் இந்த ஜனநாயக சீலர்கள், தங்கள் தொழிற்சங்க ஜனநாயக எல்லைக்குள் மட்டும் தொழிலாளர்களின் 'கேரோ' போராட்டத்திற்கு கூட அனுமதிப்பதில்லை. அவ்வாறு போராட்டம் நடத்தும் தொழிலாளர்களைத் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் என்று தன் பேரரசின் மன்னர்களுக்கு - ஆளும் வர்க்கங்களுக்கு காட்டிக் கொடுக்கிறார்கள்.

''தொழிலாளி வர்க்கம் கோடிக்கால் பூதமடா! கோபத்தின் ரூபமடா!'' என்று சந்தக் கவிதை வாசிக்கும் இவர்களின் மாநாட்டு நிகழ்ச்சி நிரலை பார்த்தாலே தொழிலாளர் வர்க்க போர்க்குணத்தை எப்படி இவர்கள் எட்டுக்கால் பூச்சியாக விழுங்குகிறார்கள் என்பது தெரியும். கூச்சம் இல்லாமல் தீக்கதிரில் அதைவேறு எழுதுகிறார்கள். ''சுபகாரியத்தைத் துவக்கப் பயன்படுத்தும் நாதஸ்வரத்திலிருந்து மனதை மயக்கும் இசை வெள்ளம்'', ''மகாகவி ரவீந்தநாத் தாகூரின் பாடலைப் பாடி அவரின் படத்தை அற்புதமாக வரைந்தது...'' இப்படி போகிறது அவர்களது மாநாட்டு சுயபுராணம் (தீக்கதிர் 11.12.03)

சுதந்திரப் போராட்டத்தில் இந்திய நாடே கொந்தளித்த போது ஐந்தாம் ஜார்ஜ் மன்னனை வரவேற்று 'வாழ்த்துபா' பாடிய ஏகாதிபத்திய துதிபாடி ''மகாகவி'' தாகூரின் முகத்தை சி.ஐ.டி.யு தலைமை தொழிலாளர்களுக்குத் தோழனாக அறிமுகப்படுத்தியது! சுரண்டும் வர்க்கத்தின் ''மங்கள இசை''யை தொழிலாளர் வர்க்கத்தின் காதில் பாய்ச்சி மோன நிலையில் ஆழ்த்தியது! எதிரிகளை நடுங்க வைக்கும் ''பறை''யும் தூக்குமேடையேறிய தோழர்களின் முகமும் இவர்களுக்குத் தேவையில்லை! மங்கள நிகழ்ச்சிக்கு அவை அமங்கலமாக காட்சியளித்தது போலும்!

மாநாட்டில் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நிரலில் வர்க்கப் போராட்டத்தில் இன்னுயிரை ஈந்த தோழர்களின் தியாகம் யாரோடு ஒப்பிடப்பட்டது தெரியுமா? நினைத்தாலே நெஞ்சு கொதிக்கிறது! இறந்த துணை ஜனாதிபதி கிருஷ்ணகாந்த், மறைந்த மக்களவைத் தலைவர் பாலயோகி, ஏகாதிபத்திய அடிவருடி முரசொலி மாறன் இவர்களின் சாவோடு மகத்தான தோழர்களின் சாவும் சேர்க்கப்பட்டது! வரலாறு இவர்களை மன்னிக்குமா?

கோப்பையில் நெய் வடியும் என்று இனிமேலும் காத்திருந்தால், சி.ஐ.டி.யு புரட்சிக்கு தயார் செய்யும் என்று இனிமேலும் நம்பினால் அதற்கு தான் பொறுப்பல்ல என்பதைதான் மாநாட்டில் ஒவ்வொரு நிகழ்ச்சியாக விளக்கியது, சி.ஐ.டி.யு.

வர்க்க உணர்வு உள்ள செஞ்சட்டை தொண்டர்களே! தோழர்களே! இனிமேலும் உங்கள் உழைப்பை, ரத்தத்தை, இன்னுயிரை சி.ஐ.டி.யுக்காக சிந்தாதீர்! நாட்டை மீண்டும் காலனியாக்கத் துடிக்கும் அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிராகவும் நாட்டையும் மக்களையும் ஏகாதிபத்தியங்களுக்கு காட்டிக் கொடுக்கும் இந்துமதவெறி பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு எதிராகவும் சமரசமின்றிப் போர் தொடுக்க நக்சல்பாரி அரசியலில் அணிதிரளுங்கள்!

ஆளும் வர்க்க அடிவருடி தொழிற்சங்கங்கள் அனுப்பிய வாழ்த்து மடல்களை மாநாட்டில் பெருமையாக சி.ஐ.டி.யு. வாசித்ததைக் கேட்டீர்களா? இன்னுமா தயக்கம்? வாருங்கள்! நாம் ஒன்றிணைந்து ஆளும் வர்க்கத்திற்கும் அவர்களைத் திரிபுவாத திரைபோட்டு மறைத்துக் கொண்டிருக்கும் இந்த போலி 'புரட்சி'காரர்களுக்கும் விரைவில் போராட்டத்தில் மரண ஓலை அனுப்புவோம்!

● தியாகு


படிப்பகம

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## ஒன்றுபட்ட போராட்டத்தின் வெற்றி

கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள பிளாச்சிமடா கிராமத்தில் இயங்கிவரும் கோகோ-கோலா குளிர்பான ஆலை நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சி, அப்பகுதியைப் பாலைவனமாக்கி வருவதை எதிர்த்து அக்கிராம மக்கள் நடத்திவரும் போராட்டத்தில் முதல் வெற்றியை அடைந்துள்ளனர். இது தொடர்பாக நடந்த வழக்கில், கேரள உயர்நீதிமன்றம், ''கோகோ-கோலா ஆலை, இனி பிளாச்சிமடா பகுதியில் நிலத்தடி நீரை எடுக்கக் கூடாது; வேறு எங்காவது இருந்து எடுத்துக் கொள்ளலாம். அப்படி, எடுக்கப்படும் நீரின் அளவு, 34 ஏக்கர் நிலத்தை உடைய விவசாயி, தனது விவசாயத்திற்கு எவ்வளவு நீரைப் பயன்படுத்துவாரோ, அதற்கு மேல் தாண்டக் கூடாது. இதனைக் கண்காணிக்கும் பொறுப்பு, பிளாச்சிமடா கிராமப் பஞ்சாயத்திற்கு உண்டு'' எனத் தீர்ப்பளித்துள்ளது.

## இந்து மதவெறி அரசின் பெருந்தன்மை

இந்து மதவெறிக் கூட்டணி அரசு சமீபத்தில் அரசு வங்கிளிடமிருந்து சில லாப ஈவு பத்திரங்களை 19,394 கோடி ரூபாய் கொடுத்து வாங்கியது. இப்பத்திரங்களின் முக மதிப்பு 14,434 கோடி ரூபாய்தான். இப்பத்திரங்களை முக மதிப்புப்படி வாங்க மைய அரசிற்கு உரிமை இருந்தும் கூட, மைய அரசு சந்தை மதிப்புக்கு, அதாவது 19,394 கோடி ரூபாய்க்கு விலைக்கு வாங்கியது. இதன் மூலம் வங்கிகளுக்கு கிடைத்த 4,960 கோடி ரூபாய் இலாபத்தை, அதாவது மைய அரசு தனது கையில் இருந்து தாராளமாகக் கொடுத்ததை, அரசு வங்கிகளின் வாராக் கடனை அடைக்கப் பயன்படுத்திக் கொள்ளச் சொல்லிவிட்டது. அதாவது, செல்வாக்கு மிக்க முதலாளிகள் தொழில் தொடங்க அரசு வங்கிகளில் கடன் வாங்கி ஏப்பம் விட்டதை, மைய அரசு பொறுப்போடு அடைக்கிறது.

## அமெரிக்க டாலர் பசியைத் தீர்க்குமா?

மைய அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ள ஒரு புள்ளி விவரம், இந்தியக் கிராமப்புறங்களைச் சேர்ந்த 200 குடும்பங்களில் ஒரு குடும்பமும்; நகர்ப்புறங்களில் 1,000 குடும்பங்களில் ஒரு குடும்பமும் அன்றாடம் கொலைப் பட்டினி கிடப்பதாகக் கணக்கு காட்டுகிறது. நகர்ப்புறங்களில் வாழும் மொத்த மக்கள் தொகையில் 6 சதவீதத்தினர் வாடகை கொடுத்து வசிக்க வழியின்றி, நடைபாதையோரம் திறந்த வெளியிலோ, அல்லது நகர்புற சேரிகளில் குடிசை போட்டுக் கொண்டோ வாழ்வதாக இப்புள்ளி விவரம் ஒப்புக் கொள்கிறது. உழைக்கும் மக்களில் கணிசமானோருக்கு அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு வரும் பொழுது, இந்திய அரசிடம் அந்நியச் செலவாணி கையிருப்பு ஒரு இலட்சம் கோடி அமெரிக்க டாலரைத் தாண்டிவிட்டதைக் கொண்டாட முடியுமா?

சென்னை - கே.கே.நகர் பகுதியில் நடைபாதையில் வசிக்கும் உதிரித் தொழிலாளர் குடும்பங்கள்.



## ''மார்க்சிஸ்டு''களின் இரட்டை வேடம்

கல்வியை வியாபாரமாக்கக் கூடாது என ஊருக்கெல்லாம் உபதேசம் செய்யும் 'மார்க்சிஸ்டு'கள், தாங்கள் ஆளும் மேற்கு வங்கத்தில் தட்டைத் திருப்பிப் போட்டுத் தட்டுகிறார்கள். அம்மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் 70 இடங்களைத் தனியாக ஒதுக்கி, அந்த இடங்கள் ஒவ்வொன்றுக்கும் வருடாந்திரக் கட்டணமாக இரண்டு லட்ச ரூபாய் வசூலித்துக் கொண்டு விற்க முடிவு செய்திருக்கிறார்கள்.

## தாழ்த்தப்பட்டோரின் உயிர் கிள்ளுக்கீரையா?

கர்நாடக மாநிலத்தில் உள்ள அட்டிபெலி கிராமத்தைச் சேர்ந்த நாராயணப்பா, தாழ்த்தப்பட்ட இளைஞர்களை அணிதிரட்டி, அம்பேத்கர் இளைஞர் பேரவையை அமைக்க முயன்று வந்தார். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அக்கிராமத்தைச் சேர்ந்த மேல்சாதி வெறியர்கள், அமைப்பைத் தொடங்கக் கூடாது என மிரட்டிவந்தனர். இந்த மிரட்டலைக் குப்பை காகிதம் போல, நாராயணப்பா ஒதுக்கித் தள்ளிவிட்டார். இதையடுத்து, அட்டிபெலி கிராம தாழ்த்தப்பட்ட குடியிருப்புக்குள் மேல் சாதிவெறிக் கும்பல் ஆயுதங்களுடன் புகுந்து, பெருந்தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலின் பொழுது, நாராயணப்பா அடித்தே கொல்லப்பட்டார்; 9 இளைஞர்கள் குற்றுயிராக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஆப்கான் குழந்தைகளை வேட்டையாடும் அமெரிக்கா

ஆப்கானிஸ்தானில் இன்றும் மறைந்து வாழும் தாலிபான் தீவிரவாதிகளைப் பிடிக்க, அமெரிக்க இராணுவம் டிசம்பரில் புதிதாக ஒரு இராணுவ வேட்டையைத் தொடங்கியது. இந்த இராணுவ வேட்டையில், ஒரு தீவிரவாதியாவது கொல்லப்பட்டதாக உறுதியான தகவல் எதுவும் வெளியாகவில்லை. ஆனால், இந்த வேட்டையின் பொழுது, அமெரிக்க இராணுவம் இதுவரை 15 குழந்தைகளைப் படுகொலை செய்துவிட்டது. போர்க் குற்றங்களுக்காக சதாமுக்கு மரணதண்டனை விதிக்கலாம் என்றால், இந்தப் படுகொலைகளுக்காக புஷ்ஷையும் தூக்கில் போடலாம்.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85 Regn.No.TN/PMG(CCR)/621/03-05




# இதுதான் இன்றைய இந்தியா

பிரதமர் வாஜ்பாயின் 79-ஆவது பிறந்தநாளையொட்டி, தமிழக பா.ஜ.க., அவரைப் புகழ்ந்து தள்ளி கொடுத்த விளம்பரம்தான் இந்தப் படம். "பாரதத்தின் சக்தி - அடல்ஜி" எனப் பீற்றிக் கொள்கிறது இந்த விளம் பரம். வாஜ்பாயி அரசின் நான்கு ஆண்டுகால சாதனையை மெச்சி, மைய அரசே தினந்தோறும் வெளியிட்டு வரும் விளம்பரங்கள் அனைத்திலும், "இந்தியா ஒளிர்கிறது" எனத் தங்களின் முதுகில் தாங்களே தட்டிக் கொள்கிறார்கள். இந்த விளம்பரங்களில் கடுகளவாவது உண்மையுண்டா?

தில்லியில் உள்ள ஒரு கணினி மென்பொருள் நிறுவனத்தில் காலியாக இருக்கும் வேலைக்கு விண்ணப்பம் கொடுக்கதான் இந்த இளைஞர்கள் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறார்கள். தமிழகத்திலோ, அரசு நடத்தும் மதுபானக் கடைகளில் சாராயம் ஊற்றிக் கொடுக்கும் வேலைக்கு பட்டதாரிகள் கூட விண்ணப்பம் போடுகிறார்கள்.

விண்ணப்பம் போடும் அனைவருக்கும் வேலை கிடைக்கப் போவதில்லை; அது அவர்களுக்கே தெரியும். அப்படி வேலை கிடைக்காமல் சோர்ந்து போகும் இளைஞனிடம் போய், "உனக்கு வேலை கிடைக்காவிட்டால் என்ன, இந்தியா முன்னேறுகிறது" எனத் தம்பட்டம் அடிப்பது வக்கிரமானதில்லையா?

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பொழுது, "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு கோடி பேருக்கு வேலை கொடுப்போம்" என வாஜ்பாயி வாக்குறுதியை அள்ளி வீசினார். ஆட்சியைப் பிடித்த பிறகோ, தனியார்மயம், ஆட்குறைப்பு என்ற சவுக்கடி மூலம், ஏற்கெனவே வேலையில் இருந்தவர்களைத் துரத்தியடித்தார், அவர். வாஜ்பாயி ஆட்சியில் நாம் கண்ட பலன், இருந்ததைப் பறிகொடுத்ததுதான். இந்தியாவில் ஒரேயொரு வேலைக்கு 1,890 பேர் போட்டி போடுகிறார்களாம். வேலையில்லாப் பட்டாளம் பெருகியதுதான் வாஜ்பாயி தலைமையில் இந்தியா கண்டுள்ள முன்னேற்றம்!



இந்தியாவில் வேலையில்லாமல் திண்டாடும் 4 கோடி இளைஞர்களின், அவர்கள் குடும்பங்களின் எதிர்காலமே இருண்டு போய்க் கிடக்கும் பொழுது, "இந்தியா ஒளிர்கிறது" என வாஜ்பாயி அரசு விளம்பரம் செய்வது மோசடித்தனமானதில்லையா? ஆட்சி மாறினால் கூட இந்த அவல நிலை மாறப்போவதில்லை. அப்படி இருக்கையில், நாம் ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில், ஓட்டுக் கட்சிகளையும், அவர்கள் அள்ளி வீசும் தம்பட்டங்களையும் இனியும் சகித்துக் கொள்ளதான் வேண்டுமா?

படிப்பகம்